# சுதந்திரன்

SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2010
கார்த்திகை 3)
முஹறம் 25
ஞாயிறு (16-12-1979)
நிறுவியது 1947
புத்தகம் 33
இதழ் 56
விலை சதம் 75


# பிரான்சிலும் ஜெர்மனியிலும் தமிழ்ஈழ விடுதலைப் பிரச்சாரம்!

## ட்ரொஸ்கி நூற்றுண்டு விழாவில் வைகுந்தவாசனின் உரை

தோழர்களே, நண்பர்களே,

தொழிலாளர்களின் மாநாடாக நடை பெறுகின்ற இந்த மாநாட்டிலே, இலங்கையில் அடிமை நிலையிலே வாழ வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழ்த் தொழிலாளர்களின் நிலையை நான் எடுத்துக் கூறுவது பொருத்தமானதாக இல்லையா? இப்பரந்த உலகிலே வேறு எந்த ஒரு நாட்டிலுமாவது, 30 ஆண்டுகளாக தொடர்ந்து ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்டமக்கள் நாடற்றவர்களாக வாழுகிறார்களா? அவர்கள் இந்தியப் பிரஜைகளுமில்லை. இலங்கைப் பிரஜைகளும் இல்லை,இந்தியாவிலிருந்தே அவர்களின் முன்னோர்கள் சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்இலங்கைத் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காகக் கொண்டுவரப்பட்டவர்கள். இலங்கைக்கு அந்த மக்களைக் கொண்டுவந்து, அவர்களால் இலாபமடைந்த பிரிட்டிஷ் தோட்ட முதலாளிகள், அம்மக்களின் உரிமைகளுக்காக வாதாடுவதில் அக்கறையற்று இருக்கின்றனர்:

தேயிலைக்கொழுந்து கிள்ளுவதன், மூலம், இலங்கைக்கு வேண்டிய அந்நியச் செலாவணியைச் சம்பாதித்துக் கொடுப்பவர்கள் தமிழ்த் தொழிலாளர்கள் என்பது உண்மை இல்லையா?

தமிழ்த் தொழிலாளர்களும் பாட்டாளிகளும் நாம் ஒரு தேசிய இனயாக வாழ்வதற்கு இன்றைய தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஏனைய தமிழ்ச் சமூகத்துடன் ஒன்றிணைய வேண்டும்.

இங்குள்ள ஏனைய விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகளை எமது தமிழீழ விடுதலைப்போராட்டத்துக்கு ஆதரவு தருமாறு அழைக்கிறேன்!'

—NEUE ARBEITER PRESSE என்ற ஜெர்மன் மொழிப் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்த திரு: வைகுந்தவாசனின் பேச்சின் தமிழாக்கமே மேலே தரப்பட்டுள்ளது. மேற்படி ஜெர்மன் பத்திரிகையின் தமிழ்ப்பெயர், ''தொழிலாளர் ஏடு'' என்பதாகும்.

## பிராங்க்பேர்ட்டில் ட்ரொட்ஸ்கி விழாவில் தமிழ்த்தொழிலாளர் நிலைபற்றி பிரஸ்தாபம்!

## தமிழர் இணைப்புக்குழுவின் சார்பில் வைகுந்தவாசனின் வெற்றிப் பயணம்!

பிரான்சிலும், மேற்கு ஜெர்மனியிலும் தமிழ் ஈழ விடுதலைப் பிரசாரம் செய்வதற்காக லண்டன் தமிழர் இணைப்புக்குழுவின் அழைப்பாளர் திரு. கிருஷ்ண வைகுந்தவாசன் அண்மையில் மேற்கொண்ட சுற்றுப்பயணம் வெற்றிகரமாக அமைந்தது. பிரெஞ்சுப் பத்திரிகைகளில் ஈழத்தமிழர் பிரச்சினை சம்பந்தமான செய்திகள் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கப்பட்டதுடன், பிராங்க் பேர்டில் நடைபெற்ற பல்வேறு விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகள் பங்குபற்றிய ட்ரொஸ்கியின் நூற்றுண்டு விழாவில், தமிழ் ஈழ விடுதலை இயக்கப் பிரதிநிதியாக திரு. வைகுந்தவாசன் பங்குபற்றியதுடன் ஈழத்தமிழர் உரிமைப் போராட்டம் பற்றியும் அங்கு எடுத்துரைத்தார்.

லண்டனில் இயங்கிவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் அதிகார பூர்வ அமைப்பான தமிழர் இணைப்புக்குழு தமிழீழ விடுதலைக்கு வெளி நாடுகளின் ஆதரவைத் திரட்டுவதில் மும்முரமாக ஈடுபட்டு வருவது தெரிந்ததே.

அண்மையில் நோர்வே நாட்டில் தமிழீழ விடுதலைப் பிரசாரத்தைமேற்கொண்டு லண்டன் திரும்பிய திரு. வைகுந்தவாசன், மீண்டும் நவம்பர் 9ம் திகதி முதல் 23ம் திகதி வரை பிரான்சுக்கும், மேற்கு ஜெர்மனிக்கும் சென்று விடுதலை இயக்கப் பிரசார வேலைகளில் ஈடுபட்டிருந்தார்.

நவம்பர் 13—ம் திகதி பிரான்ஸ் தலைநகராகிய பாரிஸ் மாநகரில் திரு. வைகுந்தவாசன் கூட்டிய பத்திரிகையாளர் மாநாட்டுக்கு பிரான்சிலுள்ள முக்கிய பத்திரிகைகளின் பிரதிநிதிகள் சென்றிருந்தனர். ராய்ட்டர். லேமொண்டே (LAMONDE). அம்னெஸ்டி இன்டர் நாஷனல், மனித உரிமைக்கான சர்வதேசக் கூட்டமைப்பு, ஆகியவற்றின் பிரதிநிதிகள் இவர்களில் குறிப்பிடக்கூடியவர்கள். இப்பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில் கூறப்பட்ட விஷயங்களை பிரெஞ்சு தேசிய நாளிதழான ''லேமொண்டே'' உட்பட பலபத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருந்தன.

''லேமொண்டே'' என்ற இப் பிரெஞ்சு நாளேடு, 'லண்டன் ரைம்ஸ்', 'கார்டியன்', 'சென்னை இந்து' போன்ற பத்திரிகைகளையும் விட சர்வதேச கவனத்தை ஈர்த்து வருவதாகும், ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்ட பிரதிகள் விற்பனையாகும்



இப்பத்திரிகை, இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து செய்தி வெளியிட்டிருந்தது.

இதன் பின்னர் 18:11:79 இல் மேற்கு ஜெர்மனிக்கு விஜயம் செய்த திருவாளர் வைகுந்தவாசன், பிராங்க் பேர்ட் மாநாட்டிலும் கலந்துகொண்டு உரையாற்றினர்: ட்ரொஸ்கியின் நூறு

—8-ம் பக்கம் பார்க்க

## சிங்களம் மட்டும் யாருடைய திட்டம்?

மொன்ரெகு ஜெயவிக்கிரம:- இந்த நாட்டில் சிங்களம் மட்டும் என்ற திட்டம் முதன்முதலாக எப்போது எப்படி வந்தது என்ற சரித்திரத்தை நானும் இப்போது அவருக்கு(அனுராவுக்கு)கூற வேண்டியிருக்கிறது. மாண்புமிகு ஜனதிபதியிட மிருந்தே முதன்முதலாக இந்தத் திட்டம் வந்ததே யன்றி வேறு யாருடைய திட்டமும் அல்ல அப்போது அதை உமது தந்தைதான்(காலஞ்சென்ற பண்டாரநாயகா) எதிர்த்தார்,

அனுரா பண்டாரநாயக்கா!— அப்படியானுல் அவர் 1948ம் ஆண்டிலிருந்து 1956 வரை ஏன் அதை அமுல் படுத்தவில்லை?

மொன்ரெகு ஜெயவிக்கிரம:- ஏனென்ருல் உமது தந்தையும் அப்போது இருந்தது தான்,

(பாராளு மன்றத்தில் 1.12,79)

## அரசுடன் கூட்டணி சங்கமமாகுமா?

எண்ணம் — உள்ளே

## வேலைவங்கிப் படிவ மோசடி விசாரணைக்கு என்ன நடந்தது?

கணேசலிங்கம்;— திட்ட அமுலாக்கல் அமைச்சினுல் வழங்கப்பட்ட வேலைவங்கிப் படிவங்களின் அதே மாதிரிவடிவத்தில், மூன்று பிரதிகளுடன் கூடிய சில வேலைவங்கிப் படிவங்கள் மட்டக்களப்பு மாவட்ட வேலைவங்கிக்குக் கிடைக்கப் பெற்றன. இந்தப்படிவங்களையிட்டுச் சந்தேகப்பட்ட வேலைவங்கி அதுபற்றி விசாரணை செய்யும் பொறுப்பை பொலிசாரிடம் கையளித்தது. அந்த விசாரணைக்கு என்ன நடந்தது, என்று இன்றுவரை எமக்கு எதுவும் தெரியவில்லை. என்ன நடவடிக்கை இது சம்பந்தமாக எடுக்கப்பட்டது என்பதை அறியவிரும்புகிறேன். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் கட்டளையின் பேரில்அந்தப்படிவங்களை கொழும்பிலுள்ள அச்சகம் ஒன்று அச்சிட்டுக் கொடுத்திருக்கிறது.

அமிர்தலிங்கம்;— குமரன் அச்சகம்!

(பாராளுமன்றத்தில் 30,11,79)

# வேலை வழங்குவதில் இன அடிப்படையில் தமிழர்களுக்கு பாரபட்சம்!



அரசாங்கக் கட்சி உறுப்பினர்கள் இங்கு பேசுகையில், வேலையற்றோர்பிரச்சினைபற்றிக் குறிப்பிடும்போது, தமிழர், சிங்களவர் என்று பிரித்துப் பேசாது பொதுவாகப் பேசுமாறு எம்மிட்ம்கேட்டார்கள், தொழில் பிரச்சினை சம்பந்தமாகவும், அதிலே தமிழர்களுக்கு எதிராகப் பின்பற்றப்படும் பாரபட்சம் குறித்தும் நான் ஜனாதிபதிக்கு எழுதியிருந்தேன்.

## ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம்

1979ம் ஆண்டு யூலை11ம் திகதி ஜனாதிபதிக்கு நான் எழுதிய மேற்படி கடிதம் இதுதான்—

"வேலை வழங்கும் பிரச்சினையில்தான், முந்திய அர

# நான் சுமத்திய குற்றச்சாட்டை ஜனாதிபதியே ஒப்புக்கொண்டார்

சுகள் யாவற்றையும் விட உங்கள் அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக மிக மோசமான பாரபட்சத்தைக் கடைப்பிடித்து வருகிறது; 1978ம் ஆண்டு அரசாங்கம் வழங்கியதாக அறிவித்திருந்த 140,000 உத்தியோகங்களில் தமிழர்களுக்கு ஆயிரம் உத்தியோகங்கள் கூடக் கொடுக்கப்படவில்லையென்பதை அச்சமின்றியும் முரண்பாட்டுக் கிடமின்றியும் நான் துணிந்து கூறுகிறேன்.

''தாங்கள் தமிழர் விடுதலைக்கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 17000 வேலைவங்கிப் படிவங்களை வழங்கிய போதிலும், அவ்வேலை வங்கிப்படிவம்பெற்றவர்களில் 500க்கும் குறைவானவர்களுக்கே சமயா சமய, சிற்றூழிய, கூலிவேலைகள் கொடுக்கப்பட்டுள்ளன, வேலைதேடும்பசியை வெறும் படிவங்களால் தீர்த்து விட முடியாது. எம்மால் சிபார்சு செய்யப் பட்டவர்களின் வேலை வங்கிப் படிவங்கள் இப்போது நிராகரிக்கப்படுவதாக அறிகிறேன். இப்படிச் செய்வதால்; வேலையற்ற ஏழைத் தமிழ் இளைஞர்களினதும் யுவதிகளினதும் நம்பிக்கைகள் சிதறடிக்கப்படுகின்றன; இதை நீதியானது என்று நீங்கள் கருதமாட்டீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

'அரசாங்கசேவையில்சில துறைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட முழுத் ஆட்களின் தொகையையும்அதிலே தமிழர்களின் எண்ணிக்கையையும் நான்கீழே தருகிறேன்.

இலங்கை நிர்வாகசேவை —140 பேர் தெரிவுசெய்யப் பட்டனர்—தமிழர்ஒருவரும் இல்லை;

உதவி புகையிரத நிலைய அதிபர்கள்— 98பேர்தெரிவு செய்யப்பட்டனர்— அதில் 4பேர் மட்டுமே தமிழர்.

உதவி மருத்துவ பயிற்சியாளர் (AMPS) பார்மஸிஸ்டுகள் ரேடியோ கிராபர்கள்—480 பேர் தெரிவுசெய்யப்பட்டதில் 7 பேர் மட்டுமே தமிழர்கள்.

நில அளவை பயிற்சியாளர்கள்— 318 பேர் தெரிவு செய்யப்பட்டனர் அதில் 5 பேர் தமிழர்.

இலங்கை கடற்படை— 2170 பேர் தெரிவு செய்யப்பட்டனர்;146 பேர் மட்டுமே தமிழர்.

பட்டதாரி ஆசிரியர்கள்— ஆயிரத்துக்குமேற்பட்டோர் தெரிவு செய்யப்பட்டனர் ஒரு தமிழ் பட்டதாரி கூடத் தெரிவு செய்யப்படவில்லை-

பொது லிகிதர் சேவை— 1000க்கு மேற்பட்டோர் தெரிவு செய்யப்பட்டனர்— இதில் ஆக இருவரே தமிழர்.

ஜீ.வி- புஞ்சிநிலமே: விண்ணப்பங்கள் எதுவும் வரவில்லை,

அமிர்: விண்ணப்பங்களில்லையா? அவர்களதுபேனு காய்ந்துவிட்டிருக்கும், அதனால் அவர்கள் எழுதாமலிருந்திருப்பார்கள்!

புஞ்சிநிலமே; விண்ணப்பங்கள் வந்தன—ஆனால்மிகவும் குறைவாகத்தான்.

அமிர்: நொன்சென்ஸ்! ஆசிரியர்கள் ஏறத்தாழ 17,000 இப்போது மேலும் அதிகரித்துவிட்டது. அந்நேரத்தில் 700 ஆக இருந்தது;

(கடிதத்தை தொடர்ந்து படிக்கிறார்)

கடிதத்துக்கு இந்த ஒரு துறையில் மட்டும் உங்கள் கூற்றுச் சரியானது'' என்று அவர் பதில் எழுதியிருந்தார்.

நெவில் பெர்னாண்டோ; கடிதம் முழுவதையும் வாசியுங்கள்.

அமிர்:— நான் உத்தியோகப்பிரச்சினை சம்பந்தமான விடயத்தில மட்டுமே அக்கறை கொண்டுள்ளேன்.

உபசபாநாயகர்,—கடிதத்தின் எந்தப்பகுதியைப்படிப்பது என்பது பேச்சாளரின் விருப்பத்தைப்பொறுத்தது.

அமிர்; ஆகவே என்னைக் குழப்பாதீர்கள்— உங்கள் நேரமும் போகிறது—எனது நேரமும் போகிறது,

நெவில் பெர்னாண்டோ: கடிதத்தை வாசியுங்கள்;

# வரவு செலவுத் திட்ட விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவரின் பேருரை

''நான் மேலே தந்திருக்கும் புள்ளிவிபரங்கள் நூற்றுக்குநூறு சரியில்லாமலிருக்கலாம். ஆயினும் முடிந்தளவு சரியான தகவலைத் தந்துள்ளேன். தமிழ் மக்களின் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதாகக்கூறிப் பதவிக்கு வந்த அரசு, எவ்வளவுதூரம் இப்போது அநீதி இழைக்கிறது என்பதை இப்போது நீங்கள் உணர்வீர்கள். இப்படிப் பட்ட அரசின் நட்புக்கரத்தைத்தான் நாம் பற்றிக் கொள்ள வில்லையென்று நீங்கள், கூறுகிறீர்கள்; அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ளபத்திரிகையொன்று, நமக்கு உணவூட்டிய கையை நாம் கடித்து விட்டதாக வேறு குற்றம் சுமத்தியிருக்கிறது;'

## ஜனாதிபதியே ஒப்புக் கொண்டார்

இனிமேல் நான் கூறப்போவதுதான்சுவையானது. ஜனாதிபதி எனக்கு16.7.79ல் பதில் எழுதியிருந்தார். அவரது பதிலில், "இந்த ஒருதுறையில் மட்டும் நீங்கள் கூறுவது சரியானது'' என்பதாக எழுதியிருந்தார், எனது குற்றச்சாட்டுக்கு, தாம் குற்றவாளியென்பதை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார். தமிழர்களுக்கு எதிராக, வேலைவழங்குவதில் கொடூரமான பாரபட்சம் கடைப்பிடிக்கப்படுவதை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார். நான் எழுதிய

அமிர்: இக்கடிதம் எல்லாச் செய்தித்தாள்களிலும் வெளியிடப்பட்டது. இது ஜனாதிபதி எனக்கெழுதிய கடிதம், அதைநீங்கள்வாசிப்பதில் அப்போது அக்கறை செலுத்தாமலிருக்கலாம். கௌரவ இரத்தினபுரிஉறுப்பினர் ஐக்கிய அமெரிக்காவுக்கு சென்றுதிரும்பிய பின்னர், சாதுவாக இருப்பாரென்று நினைத்தேன். அவர் தன்னைக்கட்டுப்படுத்தபயில வேண்டும்—நிறைய வாசிக்க வேண்டும்,

புஞ்சிநிலமே: நான் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளுகிறேன்— நீங்கள் கடிதம் முழுவதையும் படியுங்கள்.

அமிர்: முழுக்கடிதமும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்திச் சேவையில் ஒரு முறையல்ல— பலதடவை ஒலிபரப்பப்பட்டது. எனது வாதத்துக்காக அதில் ஒரு பகுதியையே இங்கு வாசிக்கிறேன்— சகல செய்தித்தாள்களும்...... (குறுக்கீடு) நான் எதைவாசிக்க வேண்டும் அல்லது எதைவாசிக்கக் கூடாதென்று எனக்கு நீங்கள் கட்டளைபோட முடியாது. எனவே வேலை வழங்குவதில் இனப் பாரபட்சம் நிலவுவதை ஜனாதிபதியே ஒப்புக் கொண்டிருக்கிறார்,

## ஆசிரிய நியமனம்

இதன் பின்னர் தமிழ் ஆசிரியர்களுக்கு கூடுதலாக நியமனம் வழங்குவதற்கு அரசு முடிவுசெய்தது. பத்திரிகைகளில்.வந்த செய்திப்படி ஆசிரியர்களாக நியமிக்கப்பட வேண்டியதமிழர்களைத் தெரிவு செய்யும் பொறுப்பு தமிழ் சமுதாயத்தைச் சேர்ந்த சில பிரமுகர்களிடமும். சில அமைச்சர்களிடமும் ஒப்படைக்கப்பட்டது. மலையகத்திலிருந்து ஒரு குறிப்பிட்டளவு தொகையினரை சிபார்சுசெய்யும்படி திரு. தொண்டமான் கேட்கப் பட்டார், கௌரவ நீதியமைச்சரிடமும்— அடுத்த எனது நல்லநண்பர்கௌரவ அமைச்சர்—அவர்எதற்காக அமைச்சர் என்பது எனக்குத் தெரியாது— திணைக்களம்எதுவுமில்லாத அமைச்சர்என்று நான் கூறுகிறேன்; அவரிடமும் வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து தெரிவு செய்யுமாறுகோரப் பட்டது.

நான் இச்சபையிலுள்ள எந்த உறுப்பினர் மீதாவது குற்றம் சுமத்தவில்லை, ஏனெனில் என்னிடம் ஆதாரம் கிடையாது, ஆசிரியநியமனங்கள் குறித்து இச்சபையிலே பேசிய உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் திட்டவட்டமாக குற்றம் சுமத்தினார்கள்.

## ரூபா 1,90,000, இலஞ்சம்

நான் கிழக்கு மாகாணத்துக்கு சென்றிருந்தபோது— பட்டிருப்பில் உள்ள ஒரு கிராமத்தில், அந்தக் கிராமத்து மக்கள் ஆசிரியவேலைக் காகபலரிடமும், ஒரு இலட்சத்து தொண்ணூறாயிரம் ரூபா இலஞ்சமாகக்கொடுத்திருப்பதாகஎன்னிடம் தெரிவிக்கப்பட்டது, ஒருகிராமத்தில் மட்டும் 1.90,000ரூபா!

அதுமட்டுமல்ல— ஆசிரியர் வேலைக்கு எதிர்ப்பார்த்திருப்போரதும், ஆசிரியநியமனம் கிடைத்தோரதும் பெற்றோருக்குச் சொந்தமான ஏராளமான தங்க நகைகள், வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்கள் வங்கிகளிலும், மற்றும் வட்டிக்கு பணம் கொடுக்கும் நிலையங்களிலும் அடகு வைக்கப் பட்டிருக்கிறது, இது எனக்கு நன்கு தெரியும்,

ரெனிடீமெல்: எதிர்க்கட்சித்தலைவர் திட்டவட்டமான குற்றச்சாட்டுச் சுமத்தக்கூடிய நிலையிலிருக்கிறாரா? 300 மில்லியன் பெறுமதியான இரத்தினக்கல் கடத்தப்பட்டது எனக்கும் தெரியும். ஆனால் ஆதாரம் இல்லாததால்,நான் பேசாமல் இருக்கிறேன்.

அமிர்;—நாம் ஜனாதிபதிக்கு எழுதியுள்ளோம் திருக்கோணமலை,வவுனியா, மன்னார் உறுப்பினர்களும் எழுதியுள்ளனர், ஜனாதிபதி பெயர்களைத் தருமாறு கேட்டு,நாம் பெயர்களையும் கொடுத்துள்ளோம். ஆனால் அப்பெயர்களை கொடுப்பதால் மட்டும் பயனில்லை, ஆனல் வேலைபெற்ற இளைஞர்கள் உண்மையைக் கூறினால்,அவர்களின் வேலை பறிபோகாது என்பதற்கு உத்தரவாதமும், அவர்கள் கொடுத்த பணம் திரும்பி அவர்களுக்கு கிடைக்கும் என்ற உத்தரவாதமும்வழங்கப்படவேண்டும், நீங்கள் அந்த உறுதி மொழியைத் தந்தால் நாம்ஊழல் நிகழ்ந்திருப்பதை நிச்சயம் நிரூபிப்போம்.

ஆர். பிரேமதாசா,— அரசின் சார்பிலே அந்த உத்தரவாதத்தை அளிக்கிறேன்,

வி.என், நவரத்தினம்: தயவு செய்து தெரிவுக்குழுவை நியமியுங்கள், உண்மைகளுடன் வருகிறோம்.

—7-ம் பக்கம் பார்க்க

# எமது பிரச்சினைகளை நாமே கவனிப்போம்!

# எம்மை தனியே விட்டுவிடுங்கள்

## மக்கள் தந்த ஆணைக்கு மாறாக நாம் செயற்பட முடியாது

—7-ம் பக்கத் தொடர்

படியா ஒத்துழைப்பை நாடுவது? நாம் மாவட்ட அமைச்சருடன் ஒத்துழைக்கிறோம்; அவருடன் நாம் ஒத்துழைப்பதனால். லயனல் பெர்னாண்டோவுக்கு நடந்தது அவருக்கும் நடவாதென்று நம்புகிறேன்;

நிசங்கா: யாழ்ப்பாண அரசாங்க அதிபரை சாபத்தீடு என்று உறுப்பினர் குறிப்பிட்டது சரியல்ல என்று நினைக்கிறேன்.

அமிர்; அது எண்ணத்தின் வெளிப்பாடே தவிர அவருக்கு எதிராக குற்றம் சுமத்தவில்லை; யாழ்ப்பாணத்தின் முந்திய அரசாங்க அதிபர் ஒருவர், இன்றைய அரசாங்க அதிபருக்காக வாதாடுகிறார். நமக்கு நிலைமை விளங்குகிறது;

சபாநாயகர்: அரசாங்க அதிபருக்குப் பாதகமான எதையும் எதிர்க்கட்சித் தலைவர் கூறவில்லை.

அமிர்: ஆகவே ஒத்துழைப்பு என்பது இருபக்கத்தில் இருந்தும் வரவேண்டியது. ஒரு பக்கத்திலிருந்து அது வரமுடியாது. பல்லாண்டுகளாக இழைக்கப்பட்டு வரும் அதே குற்றத்தை மக்களை விரக்திக்குத் தள்ளிய அதே செயலைச் செய்து கொண்டே, ''இப்போது நீங்கள் ஒத்துழையுங்கள் — தவறுகளை பின்னர் நாம் திருத்துகிறோம்' என்று நீங்கள் கூறமுடியாது. அதே தவறுகளையே தொடர்ந்து செய்கிறீர்கள். நிச்சயமாக சூடு கண்ட பூனை அடுப்பங்கரை ஏறாது. தமிழ் மக்கள் மீது பல தடவைகள் சவாரி விடப்பட்டுள்ளன. எனவே யாரையும் நம்புவதற்கு முன் அவர்கள் மிகமிக எச்சரிக்கையடைகிறார்கள்.

நிபுணர்கள் பலர் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை அபிவிருத்தி செய்வதே சரியான பொருளாதார வழியென்று பரிந்துரை செய்திருந்தும், அப்பரிந்துரையை ஒதுக்கிவிட்டு, எம்பிலிப்பிட்டியில் புதிய இரசாயனத் தொழிற்சாலையை அரசாங்கம் நிறுவியுள்ளது.

வரவு செலவுத் திட்டத்தின் பல்வேறு அம்சங்களையும் ஆராய்ந்துள்ளேன். இன்னும் ஒரு விடயம்பற்றிக் கூறவிரும்புகிறேன். ஜனாதிபதி அவர்கள் மிகவும் சரியான கருத்தொன்றை வெளியிட்டுள்ளார். 4.11 79 சன் பத்திரிகையில் அது வெளியிடப்பட்டுள்ளது.

### ஜனாதிபதி கூற்று

''கட்சியைக் காட்டிக் கொடுக்கும் எவரும் போக வேண்டியதுதான் — அண்மைய நிலைபற்றிஜனாதிபதி''

—கட்சியையும் அரசையும், அதன் கொள்கைகளையும் காட்டிக் கொடுக்கும் எவரும் போக வேண்டியவர் தான்—அல்லது ராஜினாமா செய்யவேண்டும் -இவ்வாறு ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்றுக்கூறினார்.'

— இதுவே சன் பத்திரிகைச் செய்தியாகும்.

பிரதமர் இங்கு பேசியபோது, முன்னாள் கும்புறுப்பிட்டிய உறுப்பினர் ஏன் பதவி விலக நேரிட்டது கடுவெல உறுப்பினர் ஏன் அமைச்சரவையிலிருந்து விலக நேரிட்டது என்பதையெல்லாம் விளக்கினார். அவர் கூறியவற்றுடன் நான் உடன்படுகிறேன். ஆனால் மனச்சாட்சி பற்றிப் பேசிய பிரதமரிடம் நான் கேட்க விரும்புகிறேன் — ஐ. தே. கட்சிக்கு பொருத்தமான அதே சட்டம் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும் பொருந்தாதா? குறிப்பிட்ட ஒரு கொள்கையை முன்வைத்து கட்சி முத்திரையுடன் போட்டியிட்டு வெற்றி பெற்று வந்த ஐ. தே. க. உறுப்பினர் ஒருவர், தான் சார்ந்த கட்சியையும் கொள்கையையும் கைவிட்டு, அதன் காரணமாக அவர் ஒன்றில் கட்சியிலிருந்து தாமாக வெளியேற வேண்டும் அல்லது வெளியேற்றப்பட வேண்டும்என்ற நிலையிருக்குமானால்—அதே சட்டம் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ஒருவருக்குப் பொருந்தாதா? அது பொருந்தும் என்றே பிரதமர் கருதுவார் என்று நினைக்கிறேன்;

பிரேமதாசா: அது பொருந்தும் என்பதை ஏற்கிறேன் — ஆனால் தான் விரும்பும் எந்தக்கட்சியிலும் சேருவதற்கு அவருக்கு சுதந்திரமுண்டு.

அமிர்தலிங்கம்: அவர் தாமாகவே ராஜினாமா செய்ய வேண்டும்—அல்லது ராஜினாமா செய்ய வைக்கப்பட வேண்டும்.

பிரதமர்: யார்?

அமிர்: கட்சிமாறிய மனிதர்.

பிரேமதாசா: அது குறிப்பிட்ட உறுப்பினரைப் பொறுத்தவிடயம்.

அமிர்: இது பிரதமரின் மனச்சாட்சியிலிருந்து வருகின்ற பதிலாக இருக்க முடியாது; நிச்சயமாக இல்லை. பிரதமர் தர்க்க ரீதியாகப் பேசுகிறாரே தவிர-நியாயப்படி பேசவில்லை.

பிரதமர்: எதிர்க்கட்சித் தலைவர் என்ன கூறுகிறார்? மந்திரிசபையிலிருந்து விலகும் ஒருவர். தான் விரும்பும் எந்தக் கட்சியிலும் சேர்ந்து கொள்ளுவதற்கு உரிமையுண்டு.

அமிர்: நான் மந்திரிசபை பற்றிக் குறிப்பிடவில்லை. நான் உங்களால் ராஜினாமா செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட முன்னாள் கும்புறுப்பிட்டிய உறுப்பினரையே குறிப்பிடுகிறேன். ஜனாதிபதி குறிப்பிட்டதும் அவரைப்பற்றித்தான்.

பிரேமதாசா: ஆகவே அவர் ராஜினாமா செய்தார்;

அமிர்: அல்லது அவர் ராஜினாமா செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டாரா?

பிரேமா: அவர் ராஜினாமா செய்தார்.

அமிர்: நிச்சயமாக என்ன நடந்தது என்று எமக்குத் தெரியும். நீண்டகாலமாக அடிபட்டு வந்த முழு விஷயமும எமக்குத் தெரியும். எவராவது கும்புறுப்பிட்டிய முன்னாள் உறுப்பினர் தாமாகவே தற்கொலை செய்தார் என்று கூறமாட்டார்கள். அவர் பதவி விலகுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார்; அதனால் அவர் பதவி விலகினார். இச்சபைக்கு குறிப்பிட்ட ஓர் உறுப்பினர்தான் எக்கட்சியிலிருந்து தெரிவு செய்யப்பட்டாரோ—அவர் தான் சார்ந்த கட்சியைக் காலைவாரி விட்டபோது; அவர் பதவியிலிருந்து விலகுமாறு கோரப்பட்டார் அல்லது கட்சியிலிருந்து தூக்கியெறியப்படுவார் என்று அவருக்குக் கூறப்பட்டது.

சபாநாயகர்: நான் எதிர்க்கட்சித் தலைவருக்கு கவனப்படுத்துகிறேன்- குறிப்பிட்ட உறுப்பினர் இப்போது இச்சபையில் இல்லை.

அமிர்: நான் புதிதாக எதையும் கூறவில்லை. புதினப் பத்திரிகைகளில் வந்ததையே குறிப்பிடுகிறேன்.

சபாநாயகர்: இச்சபையின் உறுப்பினர் பதவியிலிருந்து அவர் ராஜினாமா செய்துவிட்டதாக மட்டுமே பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது. வேறு விஷயங்களைப் பற்றிப்பேசுவதாக இருந்தால் தனியான தீர்மானம் கொண்டுவர வேண்டும்;

அமிர்: எல்லாப் பகுதியையும் நேர்மையான கண்ணோட்டத்துடன் ஒருவர் பார்க்க வேண்டும். அரசாங்கத்தின் மீது நாம் நம்பிக்கை வைக்க வேண்டுமென்று அரசு விரும்புமானால் -கட்சி பேதமற்ற முறையில் அவர்களின் தத்துவங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். ஐ,தே.கட்சி உறுப்பினருக்கு ஒரு சட்டமும் கூட்டணி உறுப்பினருக்கு இன்னொரு சட்டமும் இருக்கமுடியாது.

பிரேமதாசா; அதுஎன்ன? அது தான் எனக்கு விளங்கவில்லை,

அமிர்; நீங்கள் என்ன தான் கூறினாலும் — தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுகட்சியால் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருந்த எமது கட்சி உறுப்பினர் ஒருவர், கட்சி மாறுவதற்கு வாய்ப்பாக அரசியலமைப்புச் சட்டத்துக்கே திருத்தம் கொண்டு வரப்பட்டது. அவருக்கு ஓர் அமைச்சும் பரிசளிக்கப்பட்டது;

சபாநாயகர்:— நீங்கள் மீண்டும் ஆபத்தான தளத்தில் சென்று கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் நடத்தை பற்றி கூறுகிறீர்கள்! அதை நீங்கள் கூறமுடியாது, அதை வாபஸ்பெறுங்கள்;

அமிர்.— நான் உறுப்பினரின் நடத்தைபற்றிக் குறிப்பிடவில்லை, உண்மைகளையே கூறுகிறேன்.

சபாநாயகர்:— நீங்கள் ஓர் சிரேட்ட அரசியல்வாதி உங்களுக்கு சபையின் நிரந்தரக் கட்டளைகள் தெரியும். சபை உறுப்பினரின் நடத்தை பற்றிக் கூறுவது—

அமிர்:— நான் பாராளுமன்ற உறுப்பினரின் நடத்தை பற்றிக்குறிப்பிடவில்லை —பிரதேசஅபிவிருத்தி தமிழ் மொழி இந்துமத அமைச்சரைப் பற்றிய உண்மை

—6-ம் பக்கம் பார்க்க

## இலங்கையில் கருத்து வெளியிடும் உரிமைக்கும் அடிப்படை உரிமைகளுக்கும் கட்டுப்பாடு!

### அம்னெஸ்டி இன்டர் நாஷனல் அறிக்கை

''இலங்கை ஜனநாயகக் குடியரசின் புதியஅரசியலமைப்பில் இலங்கையர் உட்பட நாடற்ற மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறபோதிலும், சில அடிப்படை உரிமைகளுக்கான உத்தரவாதங்கள் முக்கியமாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

''இலங்கையின் வடபகுதியில் தமிழ்பேசும் மக்களுக்காக தனியரசு அமைக்கும் பிரசாரத்தில் ஈடுபட்ட சிறுபான்மைத் தமிழ் இளைஞர்களுக்கு எதிராகத் தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் அதனையொத்த இயக்கங்களையும் தடைசெய்யும் சட்டம் கொண்டுவரப்பட்டது.

''பிரஸ்தாப சட்டத்தின் கீழ் பிணை வழங்குவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. தடுப்புக் காவலில் எவரையும் ஒரு வருடகாலத்திற்கு வைக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது:

''அதுபோலவே குற்றவியல் கோவைசட்டத்தின் 120 வது பிரிவு, சுதந்திரமாகக் கருத்துவெளியிடும் உரிமையைக் கட்டுப்படுத்துவதாக உள்ளது,

விசாரணையின்றி நெடுங்காலமாக சிறையில் வைத்திருக்கும் நிலைபல ஆசியநாடுகளில் நிலவுகிறது''

—மேற்கண்டவாறு அம்னெஸ்டி இன்டர் நாஷனல் தனது 1979ம் ஆண்டுக்கான அறிக்கையில் இலங்கை பற்றித் தெரிவித்திருக்கிறது,

சர்வதேச மன்னிப்புச்சபை தனது ஆண்டறிக்கையில் 96 நாடுகளில்தான் நடத்திய ஆய்வுகள் பற்றி விவரித்துள்ளது: அதில் இலங்கையும் ஒன்றாகும்.

# ஆரோக்கியமான ஜனநாயகத்துக்கு புகழ்மாலை அவசியம்தானா?

வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பங்கு பற்றிய பாங்கையும், அதிலே அவர்கள் பங்கேற்று ஆற்றிய பொருள் பொதிந்ததும் அரசையே அதிர வைத்ததுமான சொல் மாரியையும் நாம் நெஞ்சாரப் பாராட்டியிருந்தோம்; 'கூட்டணி பா: உங்களுக்கு ஒரு சபாஷ்'' என்று ஆசிரியத் தலையங்கமும் தீட்டியிருந்தோம்;

ஆனால், பின்னர் தற்போது நடைபெற்று வரும் குழுநிலை விவாதத்தின் போது கூட்டணி பா. உக்கள் பலர் அமைச்சர்களை உச்சாணிக் கொப்புக்கு உயர்த்திப்புகழ்மாலைசூடுவதையும், பாராட்டுரை வழங்குவதையும் பார்க்கும் போது, கூட்டணிப் பா. உக்களின் போக்கை நம்மால்புரிந்துகொள்ள முடியவில்லை.

உதாரணத்துக்கு ஒன்று—

பிரதமர் பிரேமதாசா அவர்களுக்கு கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஒருவரை விஞ்சி ஒருவர் என்ற அளவுக்கு புகழ்மாலை சூட்டியிருக்கிறார்கள். ஒருவர் பிரேமதாசா அவர்களைக் கர்ம வீரர் காமராஜருக்கு ஒப்பிட, இன்னொருவரோ பேரறிஞர் அண்ணாவுக்கு ஒப்பிட்டிருக்கிறார்.

தனிப்பட்ட முறையில் திரு. பிரேமதாசாவின் எளிமையையும். ஏழைகளின் வாழ்வை உயர்த்துவதில் அவர் கொண்டிருக்கும் உண்மையான ஈடுபாட்டையும் குடிசைவாழ் மக்கள் மீது அவர்கொண்டுள்ளகாருண்யத்தையும், காட்சிக்கு எளியராக இருக்கும் அவரது இயல்பான பண்பையும் நாம் எப்போதும் மரியாதை செய்கிறோம். அரசாங்கத்திலுள்ள அமைச்சர்களில் கடமையுணர்ச்சி நிறைந்தவர் திரு. பிரேமதாசா என்பதிலும் யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது,

ஆனால் பாராளுமன்றத்திலோ, திரு. பிரேமதாசா, தனிப்பட்ட பிரமதாசாவாக அமர்ந்திருக்கவில்லை. ஆளுங்கட்சியின் தலைவராக. அமைச்சரவையின் தலைவராகவே அமர்ந்திருக்கிறார். அரசின் கொள்கைகள் சட்டங்கள் செயல்கள் அனைத்துக்கும் அவரும் கூட்டுப் பொறுப்பேற்றிருக்கிறார் அதுதான் ஜனநாயகம்.

இந்த நிலையில் திரு. பிரேமதாசாவை பிரதமராகக் கொண்ட அரசாங்கம் கொண்டுவந்த வரவுசெலவுத் திட்டத்தை ஒரு முதலாளித்துவ வரவு செலவுத் திட்டம் என்று கண்டித்துவிட்டு—வரவு செலவுத் திட்டத்தில் தமிழ் பிரதேசங்களின் அபிவிருத்தி புறக்கணிக்கப்படுவதாக உரிமைக் குரலெழுப்பிவிட்டு தமிழ் மக்கள் படுகின்ற அவதிகளை, பாரபட்சங்களையெல்லாம் எடுத்துக் கூறித் தாக்கிவிட்டு—யூ. என். பி. அரசின் பொருளாதாரக் கொள்கையால் மலைபோல உருவெடுத்துள்ள பணவீக்கத்தையும், விலைவாசி வாழ்க்கைச் செலவு உயர்வையும் எதிர்த்துப்பேசிவிட்டு—யூ. என். பி. ஆட்சியின் கீழ் வளர்ந்துள்ள இலஞ்ச லாவண்யங்களை அம்பலப்படுத்திவிட்டு—இவற்றுக்கெல்லாம் காரணமான அரசாங்க இயந்திரத்தின் தலைவரை மட்டும் தனியே பிரித்தெடுத்து; புகழ்மாலை சூடுவது ஜனநாயகமாகுமா?

வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது எந்த அரசாங்கத்துக்கு எதிராக தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பாரதூரமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினார்களோ — அதே குற்றச்சாட்டுக்குள்ளான அரசாங்கத்தின் பிரதமருக்கும் அமைச்சர்களுக்கும் குழுநிலை விவாதத்தின்போது புகழ்மாலை சூடுகிறார்கள் என்றால், இது தேவையானதா என்பதே நமது கேள்வியாகும்.

ஒருகுறிப்பிட்ட அநீதியை பிரதமரிடமோ, அல்லது ஒரு குறிப்பிட்ட அமைச்சரிடமோ சுட்டிக்காட்டியதன் பெறுபேறாக, குறிப்பிட்ட அந்த அநீதி பிரதமராலோ, அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சராலோ அகற்றப்பட்டிருக்குமானால், அந்தக்குறிப்பிட்ட சம்பவத்துக்காக மட்டும் பிரதமருக்கோ, சம்பந்தப்பட்ட அமைச்சருக்கோ, நன்றி தெரிவிக்கலாம். அதுவேறு விடயம் — ஆனால் பொதுவான புகழ்மாலைகள் எதிர்க்கட்சியிலிருந்து பிரதமருக்கும் ஏனையோருக்கும் சூட்டப்படத்தான் வேண்டுமா? அதுவும் தமிழ் மக்கள் இன்று இருக்கும் நிலையிலா?

தமிழீழ விடுதலைப் புலிகள் தடைச்சட்டம், பயங்கரவாதத்தடை (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம், அத்தியாவசிய சேவைகள் சட்டம் அவசரகாலச்சட்டம், ஆகியவற்றை கடுமையாக எதிர்க்கும் எதிர்க்கட்சி, இச்சட்டங்களை உருவாக்குவதற்கும் அமுல்படுத்துவதற்கும் கூட்டுப் பொறுப்பாக உள்ள பிர

—5-ம் பக்கம் பார்க்க

## அரசுடன் கூட்டணி 'சங்கமம்' ஆகுமா?

தமிழ்த் தேசிய இனத்தின் ஒற்றுமையையும் கட்டுக்கோப்பையும் உடைத்தெறிவதையும்—தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் பேரியக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் சிண்டுமுடிந்துகூட்டணியையே சிதைத்து அழிப்பதையும்— தமிழ் மக்களின் உள்ளங்களில் களைப்பையும் சோர்வையும் அச்சத்தையும் பிரதேசவேறுபாட்டுணர்வையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி அவர்களை தமிழீழ விடுதலைப்பாதையிலிருந்து திசைதிருப்பிவிடுவதையும்— தனது அடிப்படைநோக்கங்களாகக்கொண்டு செயற்பட்டுவரும் சிங்கள முதலாளித்துவ பத்திரிகை நிறுவனத்தின் தமிழ் நாளிதழொன்று மீண்டும் சென்ற வாரம் தனது குறும்புத்தனத்தைவெளிக்காட்டியுள்ளது.

மாவட்ட அபிவிருத்திச் சபைகள் வந்ததும் ஐக்கிய தேசியக்கட்சி அரசுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியும் சங்கமமாகப்போவதாகவும், தமிழ் ஈழக்கோரிக்கையைக் கைவிடுவது பற்றிக் கூட்டணிக்கிளைகளின் அங்கீகாரம் பெறப்படவிருப்பதாகவும், இந்தப்பத்திரிகை வழமை போலவே கயிறுதிரித்திருக்கிறது.

1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தல் முடிவடைந்த பின், 1978ம் ஆண்டு யூலைத்திங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது தேசியமாநாடு ஆவரங்காலில் கூடி தமிழ் ஈழக்கொள்கையை மீண்டும் உறுதிப்படுத்தியதையும், அதை ஆதரித்து இன்றைய பிராந்திய அமைச்சர் செ. இராசதுரை ஆவரங்கால் மாநாட்டில் அன்று முழக்கமிட்டதையும் அடியோடு மறந்து விட்டு, தேர்தலின் பின்னர் கடந்த இரண்டு வருடகாலமாககூட்டணியின் மாநாடே கூட்டப்படவில்லையென்று பச்சைப் பொய் எழுதி முழுப்பூசினிக்காயை பிடிசோற்றுள் மறைக்க முயன்றுள்ளது இப்பத்திரிகை.

இப்பத்திரிகைக்கு நினைவூட்டுவதற்காக ஆவரங்காலில் 30.7,1978ல் நடைபெற்ற கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாட்டின் அரசியல் தீர்மானத்தின் முக்கிய பகுதியைக் கீழே தருகிறோம்;

The second National Convention of the Tamil United Liberation Front, assembled in Averangal, on this 30th day of July 1978 resolves, 'to establish the INDEPENDENCE OF TAMIL EELAM by peaceful means or by direct action or struggle as announced in its Election Manifesto."

ஆவரங்காலில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது மட்டுமன்றி இந்த ஆண்டு மே 21ம் திகதி நடைபெற்ற தமிழீழ உள்ளூராட்சித் தேர்தலின் போது கூட. தமிழீழ விடுதலைக் கொள்கையை ஊர்ஜிதப்படுத்துமாறுதான் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களிடம்கோரியது. தமிழ் மக்களும் தமிழீழத்திலுள்ள ஆறு நகரசபைகளிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியையே ஆட்சி பீடத்திலமர்த்தியதன் மூலம் ஜனநாயக ரீதியில் தமிழீழ இலட்சியத்தில்தாம் கொண்டுள்ள வைராக்கியத்தை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஆக, 1975 காங்கேசன்துறை இடைத்தேர்தலின் போது முதன்முதலாக தந்தை செல்வாவினால் முன்வைக்கப்பட்டு; மக்களால் அங்கீகரிக்கப்பட்டு 1976 வட்டுக்கோட்டை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தமிழ்ஈழத் தீர்மானம், 1977 ஆடிப்பொதுத்தேர்தலில் ஜனநாயகரீதியாக தமிழ் மக்கள் முன் சமர்ப்பிக்கப்பட்டு. அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு— பின் மீண்டும் ஆவரங்காலில் நடைபெற்ற கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாட்டிலும் அது ஊர்ஜிதம் செய்யப்பட்டு, உள்ளூராட்சி மன்றத்தேர்தலின் போதும் தமிழ் மக்களால் உறுதி செய்யப்பட்டுவிட்டது.

அத்தகைய முடிவான தீர்மானத்தை— கூட்டணியின் உயிர்த்துடிப்பான கொள்கையை—தமிழ் மக்களின் அதிஉன்னதமான கட்டளையை—தமிழ்த்தேசியஇனத்தின் இறைமையை — சுதந்திரக் கோரிக்கையை தமிழர் விடுதலைக் கூட்டணி கைவிடுவதுபற்றி ஆலோசிக்க விருப்பதாக மேற்படி பத்திரிகை எழுதியது தமிழ் மக்களின் உள்ளங்களைவேண்டுமென்றே குழப்பிவிடும் கெட்ட நோக்கத்துடன்தான் என்றே நாம் கருதுகிறோம்.

தமிழீழம் எமது முடிந்தமுடிவு; தெளிந்த அரசியல் சிந்தனையாலும், அரசியல் அனுபவத்தினாலும்மேற்கொண்டமுடிவு; அதற்கு தமிழ் மக்களின் தெளிவான ஆணையைப் பெற்றிருக்கிறோம்: அந்த ஆணையை இன்னொரு தேர்தல் மூலம் வேண்டுமானால் திருப்பிப் பெறும் அதிகாரம் தமிழ் மக்களுக்குண்டே தவிர— அந்த ஆணையிலிருந்து விலகிச் செல்லவோ அதிலிருந்து முரண்படவோ தமக்கு அதிகாரம் கிடையாதென்பதை கூட்டணியின் தலைமை திட்டவட்டமாகப் பலதடவைகள் அறிவித்திருக்கிறது.

### எண்ணம்

இந்நிலையில் அரசுடன் கூட்டணி சேரும் என்று புத்தியுள்ள எவனும் எழுதமாட்டான், ஏனெனில் ஒற்றையாட்சி ஒரே இலங்கைக் கொள்கை கொண்ட முதலாளித்துவ யூ.என்.பி. அரசுடன் தமிழீழத் 'தனியாட்சி, இலங்கை இரு தேசங்கள் விஞ்ஞான சோசலிசம் என்பனபோன்ற முரண்பட்ட கொள்கைகளைக் கொண்டிருக்கும் கூட்டணி இணைவதென்பது மக்கள் ஆணைக்குவிரோதமானது மாத்திரமன்றி, தத்துவரீதியிலும் முரண்பட்டது; நினைத்துக்கூடப்பார்க்க முடியாதது.

எல்லாவற்றுக்கும் மேலாக—இலங்கையில் அற்ப சொற்பமாகவுள்ள ஜனநாயக உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கவேண்டிய அதிகாரபூர்வமான எதிர்க்கட்சித் தலைமைப் பொறுப்பை வகித்துக் கொண்டிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் அரசுடன் இணைந்து விட்டால், இத்தீவில் ஜனநாயகம் படுகொலைக்காளாகி விடுமே!

தமிழீழ விடுதலைப் புலிகள் தடைச்சட்டம், பயங்கரவாத தடுப்பு (தற்காலிக) ஏற்பாடுகள் சட்டம், அத்தியாவசிய சேவைகள் சட்டம்; அவசரகாலச்சட்டம், போன்ற ஜனநாயகவிரோதச் சட்டங்களை மூர்த்தண்யமாக எதிர்த்துவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி அதே சட்டங்களைக் கொண்டுவந்துள்ள யூ.என்.பி. அரசுடன் எப்படி 'சங்கமம்' ஆக முடியும்?

மாவட்ட அபிவிருத்திச் சபைகள் வேறு விஷயம். மாவட்ட அபிவிருத்திச் சபைகளை அரசாங்கம் நிறுவினால்—மாநகரசபை, நகரசபைத் தேர்தல்களில் போட்டியிட்டு அவற்றின் நிர்வாகத்தை கூட்டணி கைப்பற்றியது போல. மாவட்ட அபிவிருத்திச் சபைகளையும். தேர்தலில் போட்டியிட்டு கூட்டணி கைப்பற்றலாம்— அதிலே தவறு இல்லை— எதிர்க்கட்சியிலிருந்து கொண்டே அதைச்செய்யலாம். இதற்காக அரசுடன் கூட்டணி சேர வேண்டிய அவசியம் ஏதுமில்லை.

ஆகவே தமிழ் மக்களை குழப்பவும், அவர்களின் உள்ளங்களிலே தளர்ச்சியைஏற்படுத்தவும், மொட்டந்தலைக்கும். முழந்தாளுக்கும் முடிச்சுப்போட முயலும் தினசதிகளைப்பற்றி தமிழ் மக்களும், கூட்டணியினரும் எச்சரிக்கையுடனிப்பார்களாக;

# "தமிழ்ஈழ இயக்கத்துக்கு தடை வருமானல் நாம் அதை எதிர்த்துப் போராடுவோம்!"

## மனித உரிமை கூட்டத்தில் பாலாதம்பு உறுதி!

"தமிழ் ஈழக் கோரிக்கையை முன் வைப்பதற்கும் அதற்காகப் போராடுவதற்கும், தமிழ்ஈழஅரசைஅமைத்துக் கொள்வதற்கும் வடக்கு கிழக்கு மாகாணத்தமிழ் மக்களுக்கு பூரண உரிமையுண்டென்பதைநாம் ஏற்றுக் கொள்ளுகிறோம். தமிழ் ஈழத்துக்கான போராட்டத்தை முன்எடுத்துச் செல்ல வேண்டியவர்கள் நீங்களே, தமிழ் ஈழக் கோரிக்கையையும் தமிழ்ஈழ இயக்கத்தையும் தடை செய்ய ஜே. ஆர். ஜெயவர்த்தன அரசு முயற்சிக்குமானுல் அதை நாம் கடுமையாக எதிர்த்துப் போராடுவோம்"

—இவ்வாறு புரட்சிகர மார்க்சியக்கட்சியின் பொதுச்செயலாளரும் வர்த்தக ஊழியர் சங்கத்தலைவருமான திரு.பி. பாலாதம்பு யாழ் பொது நூலக கேட்போர்கூடத்தில் 10.12,79ல் நடைபெற்ற மனித உரிமைகள் தினக்கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

யாழ் மாநகர சபையின் ஆதரவுடன் யாழ் மாநகர முதல்வர் இ. விசுவநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசியதாவது;—

"1977 யூலை மாதத்தில் நடைபெற்ற தேர்தலில் தமிழ் ஈழக்கோரிக்கையை முன்வைத்துப் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வடமாகாணத் தமிழ் மக்களிடமிருந்து 68 சதவீதமான வாக்குகளும் கிழக்கு மாகாணத்திலிருந்து 31சதவீதமானவாக்குகளும் கிடைத்துள்ளன. கிழக்கு மாகாணத்தில் இருந்து கூட்டணி பா,உக்கள் இருவரை அரசாங்கம் விலைக்கு வாங்கினுலும், கிழக்குமாகாணத்தில் வாழும் மூன்று இலட்சம் தமிழமக்களில், இரண்டரை இலட்சத்துக்கு அதிகமானேர் கூட்டணிக்கே—அதாவது தமிழ் ஈழக்கொள்கைக்கே வாக்களித்துள்ளனர். ஆகவே சனநாயகக் கண்ணேட்டத்தில் பார்க்கும் போது, வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் தமிழ் ஈழக்கோரிக்கையை ஆதரித்துளளனர். இதுவே உண்மை.

தேசியஇனங்களுக்கு ள்ள சுயநிர்ணய உரிமையின்படி தனியாகத் தமிழ் மக்கள் பிரிந்து வாழ விரும்பினுல் அவர்களுக்கு அந்த உரிமை உண்டு. இதை எமது கட்சி ஏற்கிறது. எமது வர்த்தக ஊழியர் சங்கமும், தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. எமது தொழிற் சங்கத்தில் 75 வீதமானேர் சிங்களத் தொழிலாளர்களாக இருந்தாலும், அவர்கள் அனைவரும் ஏகமனதாக தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்துள்ளார்கள்.

ஆனுல் சனநாயகம்பேசும் ஜே, ஆர். ஜெயவர்த்தன தான் தமிழ்மக்களின் சனநாயகக் கோரிக்கையான தமிழ் ஈழத்தை அங்கீகரிக்க மறுப்பது மட்டுமல்ல— அதை நசுக்கிவிட தனது முழுச் சக்தியையும் பிரயோகித்து வருகிருர்.

உங்கள் தமிழ் ஈழக்கோரிக்கைநீதியானதும்சனநாயக ரீதியானதும், மார்க்சியக் கண்ணேட்டத்தின்படி சரியானதுமான கோரிக்கை. அதற்கான போராட்டத்தைக்கொண்டுநடத்தவேண்டியது உங்களது பொறுப்பு. ஆனுல், உங்கள் போராட்டத்தை நசுக்க அரசு முயற்சிக்குமானுல், அந்த முயற்சிகளை எதிர்த்துநாம்போராடுவோம்.

திரு. தொண்டமான் முன்னர் கூட்டணித் தலைவராக இருந்தவர். மலையகத் தமிழ் மக்கள் தனிநாடு கோரிக்கையைஏற்கமுடியாதென்று அப்போது அவர் கூறிய போதிலும் வடக்கு கிழக்கு மாகாணமக்களுக்கு தனிநாடு அமைக்கும் உரிமையுண்டென்பதைமுன்பு திரு. தொண்டமான் ஏற்றுக் கொண்டவர். அப்படிப்பட்ட திரு. தொண்டமான், இன்று அரசுடன் சேர்ந்து கொண்டுதமிழ்தேசியஇனத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தைமுறியடிக்க முயலுகிருர்.

கடந்த காலத்தில் மார்க்சியவாதிகள் என்று தம்மை அழைத்தவர்கள் மார்க்சியக் கொள்கைகளுக்கு முரணுக நடந்து தமிழ் மக்களை முதுகிலே குத்தினுர்கள் இன்றைக்கும் பலர்தங்களை மார்க்சீயவாதிகள் என்று கூறிக்கொண்டு- உங்கள் மத்தியிலே வரலாம் ஆனுல்அவர்கள் உண்மையான மார்க்ஸீயவாதிகள்தானு என்பதைகண்டுபிடியுங்கள், ஒருமுறை கார்ள் மார்க்ஸே இந்த மார்க்சிய வாதிகளிடமிருந்து தன்னைக்காப்பாற்றுமாறு கூறியிருக்கிருர்.

வடக்கில் அவசரகாலச் சட்டத்தையும், பயங்கரவாத தடைச்சட்டத்தையும் அகற்றுமட்டும் மனித உரிமைப்போராட்டம் ஓயக்கூடாது"

ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த எச். என். பெர்ணுண்டோபேசுகையில். தனிநாடு அமைத்துக் கொள்ள வேண்டுமென்று தமிழ் மக்கள் தீர்மானித்தால். அதை தடுக்கும் உரிமை சிங்களவர்களுக்கு கிடையாதென்றும், ஒருதேசிய இனத்துக்கு பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் உரிமை உண்டென்பதை தாம் ஏற்றுக் கொள்வதாகவும் எடுத்துக் கூறினுர்,

மேலும் அவர் பேசுகையில் சிங்கள இனவாதம் ஒடுக்கு முறை இனவாதம் என்றும் தமிழ் மக்களின் இனவாதம் அந்த ஒடுக்கு முறையிலிருந்து மீளுவதற்காகவே எழுந்ததென்றும். அடக்கப்படுபவர்களின் போராட்டத்தை இனவாதம் என்று கூற முடியாதென்றும், அடக்கப்படும் தமிழ் மக்களின் பக்கம் தமது சங்கம் எப்போதும் நிற்கும் என்றும் கூறினுர்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில்— தமிழீழத்தின் சுதந்திரத்துக்கு நாமே போராட வேண்டும். நம் கையே நமக்குதவி திரு. பாலாதம்பு போன்றவர்கள் மருத்துவச்சி வேலை பார்க்கலாமே தவிரஅழுதும்பிள்ளை அவளே பெற வேண்டும், 30 ஆண்டுகளாக தந்தை செல்வா முன்வைத்து வந்த சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை இப்போதாவது ஏற்றுக் கொண்டு நமக்கு நட்புக் கரம் நீட்டுவோரை நாம் வரவேற்கும் அதேசமயம் நமது போரை நாமே நடத்துவோம்'! என்ருர்.

சிறை மீண்ட தொழிற் சங்கவாதியான திரு.ஐ.தி. சம்பந்தன் தனது சிறை அனுபவங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது சில கட்டங்களில் கண்கலங்கி அழுதார்.

சட்டத்தரணி சு, நடராசா பேசுகையில்—அண்மைக்காலமாக தாம் ஆஜராகிய சில மரண விசாரணைகளின் போது அம்பலத்துக்குவந்த மனித உரிமை மீறல்கள் பற்றிக்குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் தமிழீழக் கோரிக்கைஎம் உயிருக்கு உயிரான இலட்சியம் அதை எப்படியும் வென்றெடுப்போம்!! என்று உறுதியேற்ருர்,

மற்றும், வணபிதா ஜெயசீலன் அடிகளார், வண. சர்வானந்தன் அடிகளார், ஜனுப் பாஷா முகைதீன்; வண. காஸ்பேர்ஸ் அடிகளார், யாழ் பா,உ, திரு.வெ, யோகேஸ்வரன், சட்டத்தரணி இ- பாலசுப்பிர மணியம், ஆகியோருட்பட பலர் உரையாற்றினர்.

—4-ம் பக்கத்தொடர்

தமரையும் ஏனைய அமைச்சர்களையும் வானளாவ வாழ்த்த வேண்டுமா?

ஆரோக்கியமான ஜனநாயகத்துக்கு இது வழி வகுக்குமா?


பிரதமருக்கு த: வி; கூ: பா. உக்கள் சிலர் அளித்த அளவுக்கு விஞ்சிய புகழுரைகளை ஆதாரமாகக் கொண்டே தினசதிப் பத்திரிகை அரசுடன் கூட்டணி சங்கமமாகப் போவதாக ஒருபுதுக்கரடியை அவிழ்த்து விட்டு தமிழ் மக்களைக் குழப்பமுற்பட்டிருக்கிறது, வெறும்வாயை மென்றவர்களுக்கு பிடி அவல் கிடைத்திருக்கிறது.

பிரதமர் பிரேமதாசா அவர்களே பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டியிருந்ததைப் போல—பிரதமரைப் பாராட்டுவதிலே எதிர்க்கட்சி பா. உக்கள் தமது நேரத்தைச் செலவிட்டிருக்காது-பிரதமரின் நிர்வாகத்திலுள்ள குறைகளைச்சுட்டிக் காட்டியிருப்பார்களாயின் ஆரோக்கியமான ஜனநாயகம் வளர எதிர்க்கட்சியினர் உதவி செய்திருக்க முடியும்,

## ஈழவேந்தனை காவலில் வைத்திருப்பது ஏன்?

### பாராளுமன்றத்தில் பண்டிதர் கேள்வி!

பயங்கரவாதத்திலே ஈடுபாடு கொண்டவரோ என்ற சந்தேகத்தின் காரணமாக திருவாளர் ஈழவேந்தன்—இவர் மத்திய வங்கியிலே கடமையாற்றியவர்— கனகேந்திரன் என்ற தம்முடைய பெயரை இவர் தனித்தமிழிலே ஈழவேந்தன் என்று மாற்றி வைத்தவர்; மத்திய வங்கியிலே ஓர் உயர் அதிகாரியாக கடமையாற்றியவர்-என்பவரைப் பிடித்து இவ்வளவு காலமும் தடுப்புக்காவலில் ஏன் வைத்திருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. நாங்கள் ஆராய்ந்தறிந்த அளவில் அவர் ஒரு தமிழ்ப் பற்றுளர். தமிழ் ஈழம் பெறவேண்டுமென்ற எண்ணம் உடையவர். அவர் எந்த விதமான பயங்கரவாதத்திலும் ஈடுபட்டவரல்ல. அவரைப் பிடித்து அங்கே வைத்திருப்பதற்கு சிலருடைய பெயர்கள். காரணமாகச் சொல்லப்பட்டது, சிலருடைய வேண்டுகோளின் பெயரில்தான் அவர் அங்கே பிடித்துஅடைக்கப்பட்டுள்ளார் என்று கூட பொதுமக்கள் கருதக்கூடியவகையிலே இப்போது கதைகள் பரவுகின்றன. எனவே அவரை மேலும் காலந்தாழ்த்தாது விடுவிக்க வேண்டுமென்றும், தடுப்புக்காவலில் வைத்திருக்கக் கூடாதென்று வற்புறுத்துகிறேன்.



தனது தாய்மொழியில் பற்றுக்கொள்வதற்காக— அந்தப் பற்றை மேடைகளில் கூறுவதற்காக — எல்லாவற்றையும் தமிழிலே செய்ய வேண்டும் என்ற பற்று இருப்பதற்காக மட்டும் ஒருவரைப் பயங்கரவாதி என்றுபிடித்து அடைத்துவைத்திருப்பதுமுறையற்றது'

— இவ்வாறு 4.12.79 இல் பாதுகாப்பு அமைச்சு மானியம் மீது குழுநிலை விவாதத்தில் பேசிய பண்டிதர் கா. பொ. இரத்தினம் பா; உ வற்புறுத்திஞர்.


### சுடர் விற்பனை பிரதிநிதிகள் தேவை

ஒரு சஞ்சிகைக்கு இரண்டு ரூபா வீதம் முற்பணம்செலுத்த வேண்டும். காசுக்கட்டளை/தபாற் கட்டளைகளை அனுப்பவேண்டிய முகவரி;

நிர்வாகி,
சிலோன் நியூஸ்
பேப்பர்ஸ் லிமிட்டெட்,

194 ஏ. பண்டாரநாயகா வீதி,
கொழும்பு-12;


## இன்றுடன் அவசரகாலச் சட்டம் 153 நாள்

# குமபுறுப்பிட்டிய முன்னள் எம்.பி.யின் நிலையும் மட்டக்களப்பு முதல்வரின் நிலையும் ஒன்றே!

## ஐ.தே. கட்சிக்கு ஒரு கொள்கை; தமிழர் கூட்டணிக்கு ஒரு கொள்கை

### இதுதான் உங்கள் அரசியல் நேர்மையா?

—3-ம் பக்கத் தொடர்

களையே கூறுகிறேன்: பாராளுமன்றத்துக்கு எந்தக்கட்சியிலிருந்து அவர் தெரிவு செய்யப்பட்டாரோ அக்கட்சியின் ஒழுங்குநடவடிக்கைக் குழுவின் முன்னல் அவர் மீதான விசாரணை முடிவடையாமலிருக்கிறது, அது உண்மை,

சபாநாயகர்;— ஒழுங்கு!

அமிர்:— அது உண்மை, ஏன் நான் அதைக் கூற முடியாது? அது உறுப்பினரின் நடத்தை சம்பந்தப்பட்டதல்ல. அரசாங்கத்தின் மீது நாம் நம்பிக்கை வைக்க வேண்டுமானல்— அவர்கள் எல்லா விடயத்திலும் பாரபட்சமின்றி நடக்க வேண்டும், எல்லோரையும் சமமாக நடத்த வேண்டும்; கும்புறுப்பிட்டியின் முன்னள் உறுப்பினர் இருக்கும் அதே நிலையிலேயே மட்டக்களப்பின் முதலாவது உறுப்பினரும் இருக்கிருர், இருவருக்கிடையே என்ன வித்தியாசம்?

சபாநாயகர்:— அந்த விடயத்தைத்தவிர்த்துவரவு செலவு திட்டம் பற்றிப் பேசுங்கள்;

அமிர்:— இல்லை— நான் அதுபற்றிப் பேசத்தான் வேண்டும்.

சபாநாயகர்;— உறுப்பினர் ஒருவரின் நடத்தைபற்றிப் பேசாதீர்கள் என்றுதான் நான் கேட்கிறேன்.

அமிர்:— நான் உறுப்பினரின் நடத்தைபற்றிப் பேசவில்லை நான் உண்மைகளையே முன்வைக்கிறேன். நான் அரசாங்கத்தின் நடத்தையையே விமர்சிக்கிறேன்.

கருணரத்தின:— அதற்கும் வரவு செலவுத் திட்டத்துக்கும் தொடர்பு கிடையாது,

அமிர்:— சமூகசேவைகள் அமைச்சர் (கருணரத்தின) நான் பேசத் தொடங்கியபோது இங்கிருக்கவில்லை பிரதமர் பேசியபோதும் இங்கு இருக்கவில்லை.

சபாநாயகர்:— ஒழுங்கு இச்சபையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டசில பிரச்சினைகளை யொட்டியே எதிர்க்கட்சித்தலைவர் பேசுகிருர். அவற்றை இங்கே பேசலாம், அதற்கு எதிர்க்கட்சித்தலைவர் பதிலும் அளிக்கலாம் எதிர்க்கட்சித் தலைவருக்குபதிலளிப்பதற்கு உரிமையுண்டு.

அமிர்;— நன்றி; நான் அரசாங்கத்தின் நடத்தை பற்றியே பேசுகிறேன், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினருக்கு எதிராககுற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கையெடுக்கப்படவிருந்தநேரத்தில் அந்த உறுப்பினர் அரசாங்கக் கட்சிக்கு மாறுவதற்கு வசதியாக அரசியல் சட்டத்துக்குத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. அவர் கட்சி மாறினர். அவருக்குப் பரிசாக பதவியும் வழங்கப்பட்டது. அதே ஐ.தே.கட்சி அரசாங்கம் தனது கட்சி உறுப்பினர் ஒருவருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை விசாரணை முடியாமலிருந்த சமயத்தில்அவரைபதவியிலிருந்து விலகும்படி நிர்ப்பந்தித்தது. தார்மீகஅடிப்படையில் இது சரியான செயல் என்பதை சனதிபதியே ஒப்புக்கொண்டுள்ளார். அதே கொள்கை எமது கட்சிக்கும் பொருந்தத்தான் வேண்டும். அல்லது அரசாங்கத்தின் நிலை—

சபாநாயகர்;— அரசியலமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட்ட போது இந்த விஷயத்தை கிளப்பினீர்களா?

அமிர்:— இல்லை. ஆனல் அவர்கள் தார்மீகம்நேர்மை என்றெல்லாம்பேசும்போது அவர்களின் கவனத்தை இதிலே திருப்பிவிட முயற்சிக்கிறேன். இப்போதாவது இதை அவர்கள்உணரட்டும் உயர்ந்த தார்மீகக் கொள்கைகள், அரசாங்கம், எதிர்க்கட்சியென்ற வேறுபாடின்றி அனைவருக்கும்பொதுவானதாகஇருக்கவேண்டும். எமக்கு நீங்கள் ஒன்றைப் போதித்துக் கொண்டு, இன்னென்றை நீங்கள் செய்ய முடியாது. இதுதான் நான் சொல்ல விரும்புவது. (குறுக்கீடு)

சபாநாயகர்:— அவரைப் பேசவிடுங்கள்,

அமிர்:— சபையின் இரு பக்கங்களிலிருந்தும் எழும் கூச்சலால் எனக்கு எதுவுமே கேட்கவில்லை, சனதிபதியும் பிரதமரும் உயர்ந்த தத்துவங்களைப் பேசினலும் அரசாங்கம் பின்பற்றும் கொள்கைகள் அதற்கு முரணக இருப்பதை சுட்டிக்காட்டவே இதைக்குறிப்பிட்டேன். அதனல்தான் அரசின் வாக்குறுதிகளை நாம் சந்தேகத்தோடு பார்க்கிறேம்.

தமிழர்களின் குறைபாடுகளை அகற்றுவதற்கு அந்தரங்க பூர்வமான, முயற்சிகள் மேற்கொள்ளப்படுமானல் நாம் ஐயம் கொள்ள மாட்டோம். இதைச்செய்ய வேண்டியது அரசின் கடமையே தவிர — எம்மைப் பார்த்து ஈழக்கோரிக்கையைக் கைவிடுங்கள் என்று மீண்டும் மீண்டும் கேட்பதிலே அர்த்தம் இல்லை. இதை நாம் திரும்பத் திரும்பக் கூறியிருக்கிறேம்.

அரசாங்கத்துக்கு திட்டவட்டமான மக்கள் ஆணையொன்றுள்ளதுபோலவே; எமக்கும் திட்டவட்டமான மக்கள் ஆணையொன்றுண்டு- தேர்தல் சமயத்தில் மக்களுக்கு நாம் கொடுத்த வாக்குறுதிக்கு முரணக, நாம் செயற்படமுடியாது.

ஆனல், நாம் திரும்பத் திரும்பக் கூறியுள்ளோம்.

அரசாங்கம் மாற்று ஆலோசனையை, அல்லது மாற்றுத் திட்டத்தை முன்வைத்தால்— அத்திட்டம் எமது மக்களுக்கு ஏற்புடையது என்று நாம் கருதினல்—அத்திட்டத்தை எமது மக்கள் முன் சமர்ப்பிக்க நாம் நிச்சயமாகத் தயாராக இருக்கிறேம். எமது மக்கள் அதை அங்கீகரிப்பார்களானல்-அதைச் செயற்படுத்த நாம் தயார். இதையே நாம் தொடக்கத்திலிருந்து கூறிவருகிறேம்;

எம்மை நோக்கி இகழ்ச்சிக் கூக்குரல் எழுப்புவதாலும், ஈழக்கோரிக்கையைக் கைவிடும்படி எம்மைக்கேட்பதாலும் நாடு எதிர்நோக்கும் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. இதைபின்வரிசை உறுப்பினர்கள் புரிந்து கொள்ளட்டும், இப்படிக் கூச்சல் போடுவதால் எமக்கெதிராக இச்சபையில் இடியோசைப் பேச்சுக்களை நிகழ்த்துவதால், அவர்களுக்கு அவர்களது தொகுதிகளில் செல்வாக்கு கிடைக்கலாம். அவர்களுக்கு துட்டகைமுனுபோல முடிசூட்டப்படலாம், ஆனல் இதனல் நாட்டின் பிரச்சினை தீரப் போவதில்லை: நான் கல்வியமைச்சரிடமிருந்து சரித்திரம் படிக்க விரும்பவில்லை, அல்லது அவரை Minister of ''Mis—Education'' என்று அழைக்கலாமா?

சபாநர்யகர்: நீங்கள் இது பற்றி உண்மையிலே அக்கறைப்படுகிறீர்களா?

அமிர். நான் அவரிடம் இருந்து பாடம்படிக்க விரும்பவில்லையென்று கூறினேன். அவர் அதிலே அக்கறை செலுத்துவதாக தெரியவில்லை.

நிசங்கா விஜயரத்தின:— நான் துட்டகைமுனுவைப் பற்றியே குறிப்பிட்டேன், அவன் செய்த ஒரே பிழை, தற்காலிக வாச பர்மிட் வைத்திருந்தவர்களுடன் சண்டையிட்டதுதான்;

அமிர்: மூந்திய பிறப்பொன்றில் நீங்கள் தான் அவர்களுக்கு தற்காலிக வாசபர்மிட்டுக்கள் வழங்கியிருக்க வேண்டும்;

கல்வியமைச்சரின் சரித்திரக்கூற்றை முற்ருக நான் மறுக்கிறேன். பிரச்சினைக்கு ஒர் தீர்வுகாணப்படவேண்டுமாயின், பிரச்சினைகளின் அடிப்படைகளை புரிந்து கொள்ளும் உணர்வு இருக்க வேண்டும், அந்த உணர்வு இருக்குமானல் பிரதமர் குறிப்பிட்டதுபோல, இங்கு எவ்விதக் கூச்சலையும், சூட்டையும் ஏற்படுத்தத்தேவையில்லை. நான் சில நிலைமைகளை எடுத்துக்காட்டியது சபையில் சூட்டை எழுப்புவதற்காகவல்ல; 30 ஆண்டுகளாக அனுபவித்துவரும் துன்பதுயரங்களின் காரணமாக தமிழ் மக்கள் ஒரு தெளிவானநிலைப்பாட்டுக்கு இன்று வந்திருக்கிருர்கள்.

இந்த உண்மையை உணரும் சக்தி அரசாங்கக்கட்சி உறுப்பினர்களுக்கு ஏற்படுமானல், அதுவே பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வழி வகுக்கும்;

(26,11.79ல் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை).

### பத்திரிகை நிறுவனங்களை மூடமாட்டோம்

''எமது பதவிக்காலத்தில் எந்த ஒருபத்திரிகை நிறுவனமும், எமக்கு எதிராக எழுதினலும் அதனை நாம் மூடமாட்டோம்!'

—இந்த உறுதி மொழியை ஜனதிபதி ஜே.ஆர், ஜெயவர்த்தன கொழும்பு ஓராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்றதேசிய கல்வி ஊழியர் சங்கத்தின் 5 வது வருட மாநாட்டில் பேசிய போது அளித்திருக்கிருர்.

மார்கழி

சுடர்
CHUDAR

சிறுவர் சிறப்பிதழாக வெளிவந்துள்ளது

'நாளைய உலகின் நாயகர்கள்'
-பொன். பூலோகசிங்கம்
(சிறுவர் கட்டுரை)

'இளையோரே வலியவர்'
—நடமாடி
(சிறுவர் கட்டுரை)

உணர்ச்சிக் கவிஞரின் ஆக்கங்கள்
—ச. ஸ்ரீ காந்தா
(இலக்கிய திறனய்வு)

குறுந்தொகை காதல் ஓவியங்கள்
—கலாமோகன்
(இலக்கிய கவிநயம்)

இரசிகமணியின் இறுதிக்காலம்
பொன். சண்முகநாதன்
(கட்டுரை)

பயிர்கள் கருகுகின்றன
—காவலூரான்

கவிஞர் குணரத்தினம் அவர்களின் பேட்டி
— மணி

ஒருபாட்சாலை அதிபரும்..
—வே. தில்லைநாதன்
(இம்மாத பரிசுக்கதை)

சிபார்சுக் கடிதம்
—செ. குணரத்தினம்
(சிறுகதை)

ஆகிய அம்சங்களும், மற்றும் பல சுவையான தகவல்களும் அடங்கிய தேன் சிந்தும் இலக்கிய மலராக சுடர் வெளிவந்துள்ளது;

நீங்கள் கொடுக்கும் ஒரு ரூபாவுக்கு மேல் பெறுமதிவாய்ந்தது சுடர்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
நிர்வாகி
இலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டட்
194ஏ, பண்டாரநாயக்கவீதி
கொழும்பு-12

## மகன் கேட்டவுடனே தகப்பன் பெயரை சூடுவதா?

''ஊர்காவற்றுறையில் ஒரேயொரு மகாவித்தியாலயம்தான் இருக்கிறது. இங்கு எட்டுஆண்டுகளாக நிரந்தர அதிபர்நியமிக்கப்படவில்லை. ஆனல் இந்த வித்தியாலயத்தின் பெயரை மாற்ற முயற்சி எடுக்கப்பட்டது. பாடசாலைக்கு நிரந்தர அதிபரை நியமிக்காமல், பெயரை மாற்றுவதால் மட்டும் நன்மை விளையமாட்டாது. இப்பாடசாலைக்குச் சூட்டப்பட்ட புதிய பெயரை நாம் எதிர்க்கவில்லை. அது சூட்டப்பட்ட முறையைத்தான் எதிர்க்கிறேம். பெயர் வைக்கப்பட்ட முறை மக்களின் இறைமையை மறுக்கிறது. இதுபற்றி அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மகாவித்தியாலயம் என்ற பெயர் மாற்றம் இடம் பெற்றவிதத்தை கண்டித்துள்ளேன்.

தகப்பன் பெயரை பாடசாலைக்குவைக்குமாறு மகன் கேட்டால், உடனே அப்படியே வைத்து விடுவதா? தகப்பனுக்கு சிலை வைக்குமாறு மகன்கேட்கக்கூடாது. பொதுமக்கள் கேட்க வேண்டும். அதுதான் முறை''.

—பாராளுமன்றத்தில்
பண்டிதர் இரத்தினம்

# வெளிநாட்டுதவிகள் அனைத்தும் கொட்டப்படுகிறது தெற்கே!

—2-ம் பக்கத் தொடர்

அமிர்: பிரதமர் கூறியதை கேட்டு மகிழ்ச்சியடைகிறேன்—விசாரணை நடத்துவதற்கு என்னமாதிரி சபையை நியமிக்கப்போகிறீர்கள்?

பிரேமா: பாராளுமன்ற உறுப்பினர் எவருக்கும் எதிராக அத்தகைய குற்றச்சாட்டுக்கள் உண்டா.

வி.என். இடைத்தரகர்கள் மட்டும்.

பிரேமா;— ஜனதிபதிக்கு நீங்கள் கொடுத்த பெயர்களில் பாராளுமன்ற உறுப்பினர் எவரினுவது பெயர் உண்டா?

அமிர்; நியமனம் கிடைத்த ஆட்களை இந்த உத்தரவாதம் கொடுத்தபின் விசாரணை செய்தால் அப்போது உண்மை திட்டவட்டமாக வெளியே வரும்!

பிரேமா: இது விஷயத்தில் வெட்கப்பட வேண்டாம்—நீங்கள் அறிந்தவரை,யாராவது பாராளுமன்ற உறுப்பினர் உண்டா?

வி,என்: இதுவரைஇல்லை,

பிரேமதாசா; ஆனல் ஜனதிபதியிடம் புகாருக்குரியவர்களின் பெயர்களை கொடுத்து விட்டீர்கள்.

அமிர்: ஆம்,

பிரேமதாசா: நான் உறுதியளிக்கிறேன்— தகவல் தரும் எவரும் தொல்லையடையமாட்டார்கள் இதை விசாரணை செய்ய சுதந்திரமான இயந்திரத்தை உண்டாக்குவோம்,

## வெளிநாட்டு உதவிகள் எமக்கில்லை

அமிர்தலிங்கம்: அபிவிருத்திக்கென வெளிநாடுகள் வழங்கும் கடன்கள் உதவிகள். நன்கொடைகள் எதுவும் வடக்குகிழக்கு மாகாணங்களுக்கு சுவறுவதில்லையென்று தமிழர் கூட்டணி உறுப்பினர்கள் குறிப்பிட்டபோது நிதியமைச்சர் அதிலே குறுக்கிட டார்; நிதியமைச்சருக்கு அது புரியவில்லை. தான் அதை ஆராய்வதாகக் குறிப்பிட்டார். ஆனல் வெளிநாட்டுதவி கொண்டு அபிவிருத்திகள் நடைபெறத்திட்டமிடப்பட்டுள்ள இடங்களை நான் கீழே குறிப்பிட விரும்புகிறேன். அவையாவன— உலக வங்கியின் உதவியுடன் குருநாக்கல், சுவீடன் உதவியுடன் மாத்தறை நோர்வே உதவியுடன் ஹம்பாந்தோட்டை நெதர்லாந்து உதவியுடன் நுவரெலியா உலகவங்கி உதவியுடன் மொனராகலை உலக வங்கி உதவியுடன் புத்தளம்—

ஜெனிடீமெல்: முதல் மூன்று பற்றியும் நான் கேள்விப்பட்டுள்ளேன்— ஏனைய மூன்றுபற்றியும் எனக்குத் தெரியாது,

அமிர்: எனது அலுவலகத்தைக் கொண்டு நான் சகல விபரங்களையும்திரட்டியுள்ளேன். சம்பந்தப்பட்ட ஆவணங்கள் என்னிடம் உண்டு, திட்ட அமுலாக்கல் அமைச்சின் கீழ் இவை வருகிறது,

பிரேமதாசா:—அவற்றை நாம் பெற்றதுசரிதான். அப்படியில்லை என்கிறீர்களா?

அமிர்: நான் கூறுவதெல்லாம் இந்தப்பட்டியலில் வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து ஒரு மாவட்டமும் இல்லாதது குறிப்பிடத்தக்கது.

பிரேமதாசா: நாம் நன்கொடைகளை எதிர்பார்த்திருக்கிறேம். நீங்கள் பிரச்சினைகளை ஏற்படுத்தக் கூடாது, அப்படி ஏற்படுத்தினல் நன்கொடைகள் வராது உங்கள் பகுதிக்கு மாத்திரமல்ல அபிவிருத்தியடையாத எல்லாப்பகுதிக்கும் இதைச் செய்ய விரும்புகிறேன்,

அமிர்: பிரதமர் சகல பகுதிகளையும் அபிவிருத்தி செய்ய ஆசைப்படலாம்—ஆனல் எல்லோரும் அப்படியல்ல; அது எமக்கு நன்கு தெரியும்.

பிரதமர்: நான் அரசு சார்பில்கூறுகிறேன்-வடக்கு கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற பேதமின்றி பின் தங்கிய சகல பிரதேசங்களையும் முன்னேற்ற முயற்சிக்கிறேம். நன்கொடைகளை எதிர்பார்க்கிறேம்.

அமிர்: ஆனல், துரதிருஷ்டவசமாக சில இடங்களில் பாரபட்சம், இனத்துவேஷம் ஆகியவை படர்ந்துள்ளன. அதனலேயே இப்படி நடக்கிறது. இவை மட்டுமல்ல—வேறுபல திட்டங்களை, நகர அபிவிருத்தித்திட்டங்களை எடுத்துப் பார்ப்போம். மகாவலி அபிவிருத்தித் திட்டத்தினல், பின் தங்கிய பகுதிகள் அபிவிருத்தியடையப் போகின்றன. ஆனல், வடமாகாண மக்களுக்கு அது இல்லை. தமிழ் மக்களுக்கு அதனல் நன்மையில்லை. ஆனல் மற்றத் திட்டங்களின் நிலையென்ன?

## தெற்கு வளர்கிறது

நீங்கள் பல திட்டங்களை உருவாக்கியுள்ளீர்கள் கிரிண்டிஓயா நீர்ப்பாசனம், குடியேற்றத்திட்டம், இன்ஜினிமெற்றிய நீர்ப்பாசன அணைக்கட்டுத்திட்டம், வரண்ட பிரதேசத்திட்டம் என்று பல திட்டங்கள். இவையாவும்தெற்கேயன்றி ஒன்றுகூட வடக்கு, கிழக்கில் இல்லை!

முத்துக்கண்டியா நீர்த்தேக்கத்திட்டம், பேராதனையில் மருத்துவப்பயிற்சி ஆஸ்பத்திரி, சீவனகல சீனி அபிவிருத்தித்திட்டம், குருநாகல பிரதேச அபிவிருத்தித் திட்டம், கொழும்பு டொக்யாட் திட்டம். பிரதேச திட்டமிடல் ஆய்வுக்கல்வி, லோவர் ஊவாதிட்டம். இத்தனை பல திட்டங்கள்—வடக்கு கிழக்குக்கு வெளியே தான்.

## பாரபட்சம்

நீங்கள் உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியதற்கு முரணக அப்பட்டமான பாரபட்சம் காட்டுகிறீர்கள். உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறினீர்கள்—கல்வி, வேலைவாய்ப்பு குடியேற்றம், மொழி, அபிவிருத்தி ஆகிய துறைகளில் தமிழருக்கு குறைபாடுண்டு. இதன் காரணமாக அவர்கள் தனிநாடு இயக்கமொன்றை ஆதரிக்குமளவுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்'' என்று கூறிபிருந்தீர்கள்.

வேலைவாய்ப்பில். தமிழ் மக்களின் குறைப்பாடுகளைக் களைய நீங்கள் எப்படித் தவறிவிட்டீர்கள் என்பதை நான் ஏற்கெனவே எடுத்துக் காட்டினேன். இப்போது

## வடக்கும் கிழக்கும் தேயுது இங்கே!

பொருளாதார அபிவிருத்தித்துறையில். தமிழ் பிரதேசங்களை எவ்வாறு மூற்று முழுதாக ஒதுக்கியுள்ளீர்கள், புறக்கணித்துள்ளீர்கள்; பாரபட்சம் காட்டியுள்ளீர்கள், என்பதை நிருபித்துக் காட்டினேன், தமிழ் மக்களின் மனக்குறைகளை தீர்த்து வைக்கத் தவறிவிட்டீர்கள். (குறுக்கீடுகள்)

## சிங்கப்பூரின் உதாரணம்

எமதுபிரச்சினைகளை நாமே கவனித்துக் கொள்வதற்கு எம்மைத்தனியே விடுங்கள்- நாம் எமது அலுவலைப்பார்த்துக் கொள்ளுகிறேம்.

பிரதமர் ஒரு குறிப்புக் கூறினர். இந்த உலகில், ஏனையநாடுகளுடன் தொடர்பு கொண்டு தனது பொருளாதார அபிவிருத்தியை கவனிக்க வேண்டிய நாடுகளில், ஏதாவது ஒரு நாடாவது தனியாகபிரிந்துசென்று முன்னேறியதைக் எடுத்துக் காட்ட முடியுமா என்று கேட்டார். ஏன்? திறமையான முன்மாதிரியாக சிங்கப்பூரை எடுங்கள். மலேசியா சிங்கப்பூரை அதன் வழியே போகவிட்டது. தன் வழியே சிங்கப்பூர் சென்ற காரணத்தினல் அது இன்றைக்கு இலங்கை பின்பற்றக்கூடிய அளவுக்கு 'மொடலாக' அமைந்துவிட்டது: தனியேபிரிந்து சென்று தனி நாடாக இயங்குவதற்கு மலேசியாவினல் அனுமதிக்கப்பட்ட சின்ன நாடான சிங்கப்பூரின் முன்மாதிரியை நீங்கள்பின்பற்றுகிறீர்கள்: அப்படிச் செய்த நாடுகள் பலவுண்டு;

எஸ்; பி. ஹேரத்; நாம் உங்களுக்கு நான்கு உணவுப் பண்டசாலைகளை தந்திருக்கிறேம்.

அமிர்; பண்டசாலை மட்டும் தான்; உணவில்லை! 1965 — 1970க்கு இடைப்பட்ட தேசிய அரசுகாலத்தில் காலஞ்சென்ற டட்லி சேனநாயகா வந்து காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அடிக்கல் நாட்டினர். இந்த அரசாங்கம், இரண்டரை ஆண்டுகள் முடிந்தும் இப்போதாவது அத்திட்டம் குறித்து இதுவரை தனது சிந்தனையை செலுத்தியதா? அதே அரசாங்கத்தின் கீழ் கச்சாய் உப்பளத்திட்டத்துக்குநிலம் சுவீகரிக்கப்பட்டது; அவையனைத்தும் முந்திய அரசினல் கைவிடப்பட்டன; (குறுக்கீடுகள்) முந்திய அரசின் தவறுகளை நீங்களும் பின்பற்றுதீர்கள். அதைத்தான் நான் கூறுகிறேன். நீங்களே கூறினீர்கள் — முந்திய ஆட்சியாளர் நடந்து கொண்ட முறையாலேயே தமிழ் மக்கள் தனிநாட்டுக் கோரிக்கைக்குத் தள்ளப்பட்டதாக;நீங்களும் இன்று அதேகொள்கையையே பின்பற்றி அதே தனி நாடு கோரிக்கையையே நாமும் எழுப்பும் நிலைக்கு எம்மைத் தள்ளிக்கொண்டு — அதே சமயம், அக்கோரிக்கையை எழுப்ப வேண்டாம் என்று எமக்கு புத்திமதியும் கூறுகிறீர்கள்.

பிரேமதாசா; நாம் முந்திய அரசின் கொள்கைகளை பின்பற்றவில்லை—பின்பற்ற மாட்டோம். தேவையில்லாமல் விவாதத்தில் சூடேற்ற வேண்டாம்;

அமிர்: நாம் அப்படிச் செய்யவில்லை.

பிரதமர்: இரண்டு வருடங்களாக நீங்கள் குழப்பத்தை ஏற்படுத்திக்கொண்டிருந்தீர்கள். (குறுக்கீடு) உங்கள் ஆட்கள். நீங்கள் என்று குறிப்பிடும்போது உங்களையல்ல—உங்கள் ஆட்கள் சிலரையே குறிப்பிடுகிறேன். இப்போதுசமாதான காலம் நிலவுகிறது. நாடுமுழுவதையும் ஒரே அமைப்பாகவே நாம் கருதிவருகிறேம். நாம் பாரபட்சம் காட்ட முயலவில்லை. சமாதானத்தக்குரிய காலம் இப்போது தோன்றியுள்ளது. பழைய கெட்ட காலத்துக்கு மீண்டும்போகாதீர்கள்.

அமிர்: பிரதமர் உறுதிமொழி தந்தார். அவர் கனம் பண்ணுவார். ஆனல் கடந்த 25 ஆண்டு காலமாக இப்படியான எத்தனையோ உறுதிமொழிகள் காற்றுடன் கலந்து விட்டது எங்களுக்குத்தெரியும். சில அரசாங்க உறுப்பினர்கள் வடக்குகிழக்கிலுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிக் குறிப்பிடும்போது, சிமெந்து தொழிற்சாலை. பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலை போன்றவற்றைக் குறிப்பிட்டார்கள். அவர்களுக்குத் தெரியுமா, அவைஎவ்வளவு காலத்துக்கு முற்பட்டவை என்பது? இத்தீவுக்குசுதந்திரம் வந்து எவ்வளவுகாலமோ அவ்வளவுகாலம் பழமையானவைஅவை, சிமெந்து தொழிற்சாலை சட்டநிருபண சபைக்காலத்தில் — 1943-ஆம் ஆண்டு தொடங்கியது.'ஆனல் சுதந்திரத்துக்குப்பின், கதையென்னவென்ருல்... (குறுக்கீடுகள்) நீங்களும் புறக்கணிக்கப்படுகிறீர்களா? ஏன் நீங்களும் தனிநாடு கேட்கக்கூடாது?

ஓர் உறுப்பினர்: நீங்கள் ஆதரிப்பீர்களா?

அமிர்: ஆம், நாம் ஆதரிப்போம். இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன், பூநகரிப் பிரதேசம் முழுவதிலும் மக்கள் குடியேறவழி வகுக்கும் மகாதேவாபாலத்தை அமைத்துத்தருவதாக அமைச்சர் காமினி திசாநாயகா கூறினர். அவை யாவும் ஐஸ் பெட்டிக்குள் போடப்பட்டுவிட்டன, கடந்த ஆண்டு அடையாள மானியம் ஒதுக்கப்பட்டது; இந்த ஆண்டும் அடையாள மானியமே ஒதுக்கப்பட்டுள்ளது. எமக்கு எல்லாமே அடையாளம் தான்—உருப்படியாக எதுவும் இல்லை;

கருணரத்தின: அதற்குக் காரணம் உங்கள்ஒத்துழைப்பும் அடையாளம் அளவிலேயே இருப்பதுதான்:

அமிர்: அபிவிருத்தியைப் பொறுத்தவரை நாம் ஒத்துழைப்பு நல்கி வருகிறேம்; ''ஒபெக்'' மனுவில்கூட, சில பகுதிகள்எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாதவையாக இருந்தும் — பொதுவான நன்மை கருதி அதிலே நாம் கையெழுத்திட்டோம்; யாழ்ப்பாணத்தில்அரசாங்க அதிபராக திரு.லயனல்பெர்ணண்டோ இருந்தபோது அவரும், எம்முடன் ஒத்துழைத்தார் — நாமும் அவருடன் ஒத்துழைத்தோம்—மக்களும் ஒத்துழைத்தனர். மக்களின் அன்பை அவர் பெற்ருர். அவர் புலியோ. சிறுத்தையோ அல்ல — ஒரு நேர்மையான பாரபட்சமற்ற அரசாங்க அதிபர். அவர்யாழ்ப்பாண மக்களின் உள்ளங்களில் நிறைந்துவிட்ட காரணத்தினல் அவரை அங்கிருந்து மாற்றிவிட்டு யாரோ ஒருவரை— அவரது பெயரைக் கேட்டாலே யாழ்ப்பாண மக்கள் பழித்துரைக்கிருர்கள்—அப்படிப்பட்டவரை யாழ்ப்பாண அரசாங்க அதிபராக திணித்துள்ளீர்கள். அவருக்கு நாம் ஒத்துழைப்பு நல்க முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளீர்கள்: இப்

—3-ம் பக்கம் பார்க்க

# தமிழரா என்று

## சந்தேகிக்கப்படவேண்டியவர்

எம்; சிவா: நாடு முழுவதும் எத்தனை தமிழ் அரசாங்க அதிபர்கள் இருக்கிறார்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன். குருநாகலில் திரு. ஜெயநாதன் இருக்கிறார். தமிழரா என்று சந்தேகப்பட வேண்டிய ஒருவர் யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபராக இருக்கிறார். ஆக, தீவு முழுவதும் ஒன்றரைத் தமிழர்களே அரசாங்க அதிபர்களாக இருக்கிறார்கள்.

தலைவர்: ஏன் சந்தேகப்பட வேண்டும்?

எம். சிவா: ஏனெனில் ஒரு காலத்தில் ஒரு பிரமுகர் சிறீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளராக வரவிரும்பினார்.

அனுரா பண்டாரநாயகா: அது நூற்றுக்கு நூறு உண்மை;

சிவா: இருந்தும், அவர் இப்போது தனது மனத்தை மாற்றிக் கொண்டிருக்கலாம்:

★ ★ ★

# கால் தூதுவர்

அமிர்: ஏழு மாவட்டங்களில யாழ்ப்பாண மாவட்டம் ஒன்றிலேதான் அரசாங்க அதிபராக ஒரு தமிழ் உத்தியோகத்தர் இருக்கிறார். அவர் அரசாங்க நிர்வாக சேவையைச் சேர்ந்தவரல்ல—அவருக்கு அரசாங்க நிர்வாகத்தைப்பற்றி என்ன தெரியுமோ எனக்குத் தெரியாது. ஆனால் எங்கோ வெளிநாட்டுத் தூதுவர் சேவையில் இருந்தார்,

செல்லத்தம்பு: ஆனால் தூதுவராக அல்ல!

கா. பொ. இரத்தினம்: அரைத்தூதுவராக!

ஆனந்தசங்கரி: இல்லை. கால்தூதுவராக!

அமிர்தலிங்கம்: ஒரு வேளை வருங்காலத்தில் நடைபெற வேண்டிய மாற்றங்களை ஏற்றுக்கொண்டோ என்னவோ. ஒரு வேளை தமிழ்ப் பகுதிக்கு அவரைத்தூதுவராக்கப் பயிற்சி அளிக்க நினைத்தோ என்னவோ, எங்களுக்கு அவரை அரசாங்க அதிபராக நியமித்து இருக்கிறார்கள். ஆனால் மற்றமாவட்டங்கள் எல்லாவற்றிலும், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இந்த ஆறு மாவட்டங்களிலும் தமிழே தெரியாதவர்கள்தான் அரசாங்க அதிபர்களாக இருக்கிறார்கள்.''

(1.12.79 பாராளுமன்றத்தில்)




மாணவமணிகளே!

50 மில்க்வைற் நீலசோப் மேலுறைகள் அல்லது 5 மில்க்வைற் பார்சோப் மேலுறைகள் அல்லது 5 மில்க்வைற் சலவைப் பவுடர் மேலுறைகளை அனுப்பி ''மில்க்வைற் அப்பியாசக் கொப்பி'' ஒன்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்;

''மில்க்வைற்'' த. பெ. இல, 77'
யாழ்ப்பாணம்

# வெற்றிகரமாக நடைபெற்ற உண்ணாவிரதம்

யாழ் மாவட்டத்திலுள்ள அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடுப்பு (தற்காலிக) ஏற்பாடுகள் சடட்ம், அத்தியாவசிய பொதுச்சேவைகள் சட்டம் ஆகிய பாஸிஸ சட்டங்களை எதிர்த்தும், அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரியும், 9.12.79 இல் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற உண்ணாவிரதமும், பிரார்த்தனையும் வெற்றிகரமாக நிறைவு பெற்றது:

யாழ் வீரமாகாளியம்மன் கோவிலிலும், ஆசனக் கோவிலிலும், முஸ்லிம் பள்ளிவாசலிலும் இடம் பெற்ற இந்த உண்ணாவிரதம், பிரார்த்தனைகளில் ஏராளமான ஆண்களும் பெண்களும் பங்குபற்றினர். பல்வேறு அரசியல் இயக்கங்களினதும் பிரதிநிதிகளும் பங்கு பற்றினர்.

வீரமாகாளியம்மன் கோவில் வாயிலில் இடம் பெற்ற உண்ணாவிரதத்தில் திருமதி அமிர்தலிங்கம் கலந்து கொண்டு கூட்டுப் பிரார்த்தனை நடாத்தினர், இந்த உண்ணாவிரதத்தில் த. வி. கூ; தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், திரு. வெ. யோகேஸ்வரன், தா. திரு நாவுக்கரசு பா.உ. ஆகியோரும் கலந்து கொண்டனர். இதைத் தொடர்ந்து அன்று பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் கல்யாண மண்டபத்தில் பொதுக் கூட்டம் இடம் பெற்றது. இக்கூட்டத்துக்கு வண. பிதா; கஸ்பேர்ஸ் தலைமை தாங்கினார்.

# பிரான்சிலும் ஜெர்மனி....

—7-ம் பக்கத் தொடர்

வது பிறந்த நாள் கொண்டாட்டத்தையொட்டி நடைபெற்ற இந்த மாநாட்டில், அறிஞர்கள், தொழிலாளர்கள், மாணவர்கள், தொழிற்சங்கவாதிகள் உட்பட ஜெர்மனியின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஆண்களும் பெண்களுமாக சுமார் 350 பிரதிநிதிகள் பங்கு பற்றினார்கள். ஹிட்லர் காலத்துக்குப்பின்னர் ஜெர்மனியில் இவ்வளவு பிரமாண்டமான ட்ரொஸ்கீய இயக்கத்தின் மாநாடு நடைபெற்றது இதுவே முதல் தடவையாகும்.

இம்மாநாட்டில், திரு; உலிறிப்பேர்ட் நான்காவது அகிலத்தின் மேற்கு ஜெர்மனிப் பிரிவின் சார்பிலே உரையாற்றினார், பாலஸ்தீன விடுதலை இயக்கம், அரபுமாணவர்களின் பொது மன்றம், ஈரானிய மக்கள் இயக்கம், கடாபியின் லிபிய புரட்சி இயக்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் உரையாற்றினர்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் சார்பிலே லண்டன் தமிழர் இணைப்புக்குழுவின் அழைப்பாளர் திருவாளர் வைகுந்தவாசன் பேசுகையில், தமிழர்கள் இன்றைய நிலையையும், அவர்கள் நடத்தும் போராட்டத்தையும் எடுத்துக்கூறி அங்குள்ள பிரதிநிதிகளின் ஆதரவைக் கேட்டுக் கொண்டார்;

பாரிசில் இருந்தபோது பிரெஞ்சு வெளிநாட்டமைச்சின் ஆசியப் பகுதி இயக்குநர், அகதிகள், மற்றும் அரசியல் அடைக்கலம் கோருவோரின் பிரச்சினைகளைக் கவனிக்கும் பிரிவின் இயக்குநர், உதவி இயக்குநர் ஆகியோரையும் திரு. வைகுந்தவாசன் சந்தித்தார்,

பிரான்சில் தற்சமயம் 15000 ஈழத் தமிழர்கள் வாழ்கின்றனர். பெரும்பாலோர் பாரிசிலேயே இருக்கின்றனர். மேற்கு ஜெர்மனியிலும் அதேயளவு தொகையினர் உண்டு. பிரான்சில், ஈழத்தமிழர்களைவிட, பாண்டிச்சேரி, காரைக்கால் பகுதியைச் சேர்ந்த சுமார் 10,000 தமிழர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

பாரிசில் 300 தமிழர்களைக் கொண்ட கூட்டமொன்றிலும், மேற்கு ஜெர்மனியில் 150 தமிழர்களைக் கொண்ட கூட்டமொன்றிலும் திரு; வைகுந்தவாசன் உரையாற்றினார். இக்கூட்ட முடிவில் தமிழ்த்திரைப்படங்களும் காட்டப்பட்டன. தமிழர் போராட்டத்தை முன்எடுத்துச் செல்வதற்கான வழிவகைகள் பற்றிக் கூட்டத்தில் எடுத்துக்கூறப்பட்டது;

பிரான்சிலும், ஜெர்மனியிலும் உள்ள தமிழர்கள் தமிழீழ இலட்சியத்துக்கு முழு ஆதரவையும் வழங்குவதாக திரு. வைகுந்தவாசனிடம் உறுதியளித்தனர்;

# திறப்பு விழா

எதிர்வரும் 16-12-79-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி. ப. 4 மணிக்கு யாழ்ப்பாணம் பொதுசன நூல் நிலையத்தில், ''சாம் சபாபதி நினைவு மண்டபத்தை'' மாண்புமிகு மாநகர துணை-முதல்வர் திரு. பி. எஸ்; சேவியர் திறந்துவைக்கிறார். கௌரவ அதிதிகளாக எதிர் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. எம். சிவசிதம்பரம் பா. உ, திரு. வெ. யோகேஸ்வரன் பா.உ. ஆகியோர் கலந்துகொண்டு இவ்வைபவத்தைச் சிறப்பிக்கவுள்ளனர்.

கெயிட்டி (கொட்டாஞ்சேனை)

ஜெய்சங்கர், கே. ஆர். விஜயா

= நடித்த =

பால்மனம்

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) 11-வது வாரம்

சிவாஜி, சுஜாதா, விஜயகுமார், சுந்தரராஜன், நாகேஷ், மனோரமா, சத்தியப்பிரியா, சங்கீதா

-- நடித்த --

தீபம்

ஈஸ்மன் கலர்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டட்டாரால் யாழ்ப்பாணம் மகாத்மாகாந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1979ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது;